# யாழ் நாதம்

இதழ் 2

1996



யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க
கொழும்பு கிளை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE

## கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடும் கல்லூரி –எங்கள்
பெரு வரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி –உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி– உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ– உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி –ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி–இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி– உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ– உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி– இயல்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி– வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்தடுங் கல்லூரி– உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடுசூ டோமோ– உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி– என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி– நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி– உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ– உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடு

இதழ் 2 - 1996

உள் அட்டை......

கல்லூரி கீதம்

2 நம்பிக்கைத் துரும்பு

3 இதழ் விரிந்து மணம் பரப்பும் யாழ் நாதம்

4 ஆண் மகனே கூட்டுக்குள் இருந்து வெளியே வந்துவிடு

6 மாப்பிள்ளைக்கு ஏன் சீதனம்

8 சமுதாயமும் விதவைகளும்

13 பாரில் பெண்ணிடம் பணம் இல்லையேல் அப்பாவி அவளுக்கு மணம் இல்லையா?

14 எமது அன்றாட வாழ்க்கைக்கு பயன்படும் சில ஆங்கில உரையாடல்கள்

20 Tell me why Caring and Sharing

21 Add to your Knowledge

22 சிறுவர் விஞ்ஞானம்

26 இறைவன் அமைத்த மேடையிலே

28 The Deadly Diseases Cancer

36 Aids

சங்க இரண்டாம் ஆண்டு செயல் அறிக்கை

46 Free Medical Attention for the Needy

48 Breast Feeding

50 'அறிவாலயம்' வில்லுப்பாட்டு

62 Laugh for a while

64 யாழ் நாதம்- ஒரு அரிய படைப்பு

66 Have you heard this one?

68 " It ought to be beautiful I live here"

70 எங்கள் கலைவாணி சங்க கீதம்

71 சிரிப்பு சிறந்த ரொனிக்

72 உள்ளத்தின் ஓசைகள்

* * * * * * * * * * * * *

துணுக்குகள்

குறிப்புகள்

புகைப்படங்கள்

சஞ்சிகை வடிவமைப்பு
எம்.ஆர்.ராஜ்மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைத் துரும்பு

சென்ற ஆண்டு யாழ் நாதம் இதழ் 1 வெளியிட்டோம். இந்த ஆண்டு இன்னல்கள் பலவற்றின் மத்தியிலும் யாழ் நாதம் இதழ் 2 வெளியிட முடிந்தமையை இட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டு யாழ் இந்து மகளிர் கல்லூரியும் இக்கல்லூரி மாணவிகளும் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி தத்தளித்து இன்று ஓரளவு தங்கள் கஷ்டங்களுக்கு விடிவு வரும் என்ற நம்பிக்கைத் துரும்பைப் பிடித்துள்ளனர்.

இந்த நிலையில் எங்கள் கல்லூரிக்கும் அதன் மாணவிகளுக்கும் கொழும்பிலுள்ள பழைய மாணவிகள் தம்மால் இயன்ற உதவியை நல்க ஆயத்தமாக உள்ளனர். எம் இலக்கியப் பணியின் தொடர்ச்சியாக யாழ் நாதம் இரண்டாம் இதழ் வெளி வருகிறது. இதில் பழைய மாணவிகளின் ஆக்கங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

எங்கள் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், உப செயலாளர் திருமதி. தயாநிதி செல்வநாயகம், பொருளாளர் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, பல்வேறு வகைகளில் எமக்கு உதவிய அங்கத்தவர்கள், கொடை வள்ளல்கள் விளம்பரம் தந்து உதவியவர்கள் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

இம்மலரை பிரசுரிக்க உதவிய யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்திற்கும் குறிப்பாக அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும், பத்திரிகை அழகுறு பெற சகல ஒத்துழைப்பும் வழங்கிய திரு. எம். ஆர். ராஜ்மோகன் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

திருமதி. சிவகாமி அம்பலவாணர்
ஆசிரியர்.

61/2, அப்துல் கபூர் மாவத்தை,
கொழும்பு 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் விரிந்து மணம் பரப்பும் யாழ் நாதம்

யாழ் நாதம் இரண்டாம் இதழ் விரிந்து மணம் பரப்புகிறது. யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளை இந்த ஆண்டிலும் தொடர்ந்து இவ்விதழை வெளியிட முடிந்தமைக்கு அங்கத் தவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இலைமறைகாயாக இருக்கும் எழுத்தாற்றல்களை வெளிப்படுத்தி ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக இந்தச் சஞ்சிகை காலாண்டு மலராக வெளிவர வேண்டும் என்பது எமது பேரவா. பெண்கள் வெளியிடும் சஞ்சிகை என்பதால் பெண்கள் மாத்திரம் வாசிக்கும் அம்சங்கள் இருப்பதாக ஆண்கள் எண்ணிவிடக்கூடாது. குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்குமான பல்வேறு அம்சங்கள் கொண்டதாகவே மலர் உருவாகியுள்ளது. வாசக நேயர்கள் இந்த சஞ்சிகையை மெருகூட்ட எமக்குத் தமது ஆலோசனைகளை எழுதி அனுப்புவார்கள் என்று நம்புகிறோம். எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இளம் பெண்கள் எமது சங்கத்தில் சேர்ந்து நற்பணி செய்வதன் மூலம் தாம் கல்வி கற்ற பாடசாலைக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். செயற்குழு என்ற குறுகிய வட்டத்துள் நடவடிக்கைகள் அடங்கி விடாமல் பொது அங்கத்தவர்களின் முழு அளவிலான ஈடுபாட்டை நாடுகிறோம்.

**சற்சொரூபதி நாதன்**
**(தலைவி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மகனே கூட்டுக்குள் இருந்து வெளியே வந்துவிடு

மனைவி தன் உள்ளத்து உணர்ச்சிகளை வாய்விட்டுப் புலம்புவாள். அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் கணவனோ அவளுடன் மனந்திறந்து பேசாமல் மௌனமாக இருப்பான். இது சாதாரணமாக பல வீடுகளிலும் காணப்படும் நிகழ்வு. காரணம் பிறந்ததிலிருந்து ஆண் வளர்க்கப்படும் முறைதான். இரட்டை அளவு கோல்களால் ஆண் பெண் தன்மைகளை அளந்து பெற்றோரும் சுற்றத்தவரும் நண்பர்களும் பேசிப்பேசியே ஆணுக்கு இப்படி ஒரு விலங்கை போட்டு விட்டிருக்கிறார்கள். இந்தத் தளையை அறுத்துக் கொண்டு அவன் எப்பொழுது வெளிவருவான்?

ஆண் மகனே நீ பாவம்தான். நீ பிறந்த நாள் முதலே ஆஹா சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்று கொண்டாடி வளர்க்கப்பட்டாய். ஆண் குழந்தை பிறந்தது என்றதும் கூரையைத் தட்டிக் குதூகலிப்பதல்லவா எமது வழக்கம். சின்னஞ்சிறு வயதில் நீ ஓடி ஆடி விளையாடும் போது தடுக்கி விழுந்து விட்டால் அழுவாய். அப்பொழுது உன் அப்பாவும், அம்மாவும், சகோதரியும் என்ன இது பொட்டை மாதிரி அழுகிறாய். ஆண்பிள்ளையாய் சிங்கமாய் இருக்க வேண்டும் என்று முளையிலேயே மூளைச் சலவை செய்வார்கள்.

விளையாட்டுப் பருவத்தில் உனது தங்கை பொம்மைக்கு அலங்காரம் செய்வதைப் பார்த்துவிட்டு நீயும் அருகில் சென்று அதற்குக் குளிப்பாட்டி சோறூட்ட முனைந்தால், சீ – இது என்ன விளையாட்டு பொம்பிளை விளையாட்டு. அதோ உனது நண்பர்கள் வெளியே கிரிக்கட் விளையாடுகிறார்கள். அவர்களுன் சேர்ந்து விளையாடு என்று பாட்டா விரட்டுவார். மெல்லிய உணர்வுகளை ரசனைகளை வெளிக்காட்டுவது ஆண்மைக்கு அழகல்ல. இது உனக்குச் சிறுவயதில் கற்றுத் தரப்பட்ட பாடம்.

மீசை அரும்பியதும் பள்ளியில் பெண்களைக் கண்டால் வெறும் போகப் பொருளாகவும், தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகவும் எண்ண வைக்கும் விதத்தில் உன் நண்பர்கள், ஆசிரியர்கள் உன்னை வழிநடத்தினார்கள். திரைப்படக் காட்சிகள் இந்த எண்ணத்திற்கு எண்ணையூற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் உணர்வுகள் ஏற்பட்ட கட்டிளம் காலத்தில் எங்கே என் காதலைத் தெரிவித்தால் அவள் போடா போ என்று உதாசீனம் செய்துவிட்டால் மானமே போய்விடும் என்ற அச்சத்தில், சவடாலாகவும் கேலியாகவும் பெண்களைப் பற்றிப் பேச முற்பட்டாய். எத்தனை பெண்களை வென்றேன். எப்படி எப்படி எல்லாம் அவர்கள் என் பின்னால் வந்து காதற்பிச்சை கேட்டார்கள் என்று நண்பர் குழாம் முன் கற்பனையாக வீம்பு பேசி மகிழ்ந்தாய்.

கலியாணம் என்று வந்ததும், உனக்கு வீட்டில் ராஜ மரியாதை. வீட்டார் பெண் பார்க்கும் படலத்தில் இறங்கியதும் உனக்குள்ளேயே ஒரு பெருமை ஏற்பட்டுவிடுகிறது. அழகு, அந்தஸ்து, படிப்பு, பணம், இவை எல்லாவற்றையும் கொண்டு ஒரு பெண் உன் கரம் பற்றுகிறாள். உனக்கு எவ்வளவு பெருமிதம். மெல்லிய கொடியாக உன்மேல் படர வந்த அந்தப் பெண் உன்னையும், உன் குடும்பத்தவரையும் அநுசரித்து, அடக்க ஒடுக்கமாக அழகாகக் குடும்பம் நடத்தும் பாங்கினைக் கண்டு நீ வியக்கிறாய். ஆனால் அந்தப் பிரமிப்பில் நீ என்றாவது வாய்விட்டு அவளைப் பாராட்டி இருக்கிறாயா? அவள் திறமைகளை மெச்ச ஏன் இந்தத் தயக்கம்.

பெண்டாட்டி தாசன், கோழை, கூஜா என்றெல்லாம் பட்டப் பெயர்களைச் சூட்ட வேண்டி வருமே என்ற பயம். வாய்விட்டுப் பேசி யதார்த்தமாக உன் தாயிடமும் சகோதரிகளிடமும் பழகாது தள்ளி இருந்ததனால் மனைவிடமும் இதே போக்கைக் கடைப்பிடிக்கிறாய்.

சிறு தூண்டுதல் போதும் எல்லாவற்றையும் அடைத்து சீல் வைத்த போத்தல் போன்று இருக்கும் உன் உணர்ச்சிகள் ஆத்திரமாகச் சீறுவதற்கு. அரவணைக்கும் உன் கை அப்பொழுது மனைவியை அடிக்கவும் தயங்குவதில்லை. பெண் திருப்பி அடிக்க மாட்டாள் என்ற துணிவில் நீ துணிந்து அடித்து விடுவாய் பிறகு மனதுக்குள் புழுக்கம், சங்கடம். மனைவியைச் சமாதானப்படுத்த நீ ஏதேதோ வழிகளைக் கையாள்வாய். ஏன் இந்தத் திண்டாட்டம்.

நீ உண்மையில் இவ்வாறு வாய்விட்டு பேசாமல் பெரிய மனிதனாக உயர்ந்த மனிதனாக நடிப்பதால் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது. விபரம் தெரியாத நாளிலிருந்தே உனக்குக் கிடைத்த தவறான போதனைகளால் நீ உன்னை ஒரு கூட்டுக்கள் அடைத்து விட்டாய். வாழ வந்தவள் உன் சரிபாதி என்ற உண்மையைப் பகிரங்கமாக ஏற்க உன் மனம் ஒப்புக் கொள்வதில்லை. அவளிடம் ஏன் ஒளிவு மறைவுகள். அட அப்படியா என்று தவறை ஒப்புக் கொள்ளத் தயக்கம். அவள் கூறும் ஆலோசனையை நல்லது என்று ஏற்றுக்கொள்ள உன் வறட்டுக் கௌரவம் இடம் கொடுப்பதில்லை. அவள் சாதனைகளைப் பாராட்டினால் உன் தலையில் ஏறிவிடுவாள் என்று வீண் பயம்

உன் கூட்டுக்குள் இருந்து நீதான் வெளிவர வேண்டும். முயன்று பார்.

செல்வி .சற்சொரூபவதி நாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர்களே ஏன் சீதனம்?

வெயிலுக்கு மழை வந்து
வானவில் மாலை சூட்டும் போது
வாங்குகிறதா சீதனம்?

தேனெடுக்கும் வண்டு வந்து
பூவை மணக்கும் போது
தேடுகிறதா சீதனம்?

தாமரையைச் சூரியன் வந்து
தழுவி மலர்விக்க
'தா' என்பானா சீதனம்?

பச்சைக் கிளிக்கு இயற்கை வந்து
இச்சையிலே சிவப்பு ஆரமிட
கொச்சையாய் கேட்கிறதா சீதனம்?

மேகம் அது தாழ வந்து கடலவளின்
தேகம் முகர்ந்து கொள்ள
தேடுகிறதா சீதனம்?

பனித்துளி மிதந்து வந்து
நுனிப்புல்லில் வாழ்க்கை நடத்த
ஏற்பதில்லை சீதனம்.

பகல் வந்து இரவுக்கு
பொன் அந்தி மாலையிட
பறிப்பதில்லை சீதனம்.

ஓடிவரும் நதிமகளை
தேடி அணைத்திடும் கடலது
கோடியாய் கேட்பதில்லை சீதனம்.

நிலவு வந்து நித்தமும்
மல்லிகைக்கு முத்தம் தர
நினைப்பதன்றி கேட்பதில்லை சீதனம்.

வசந்தமது வலிய வந்து
வனத்தை நந்தவனமாக்கும் போது
வாங்குவதில்லை சீதனம்.

அனைவரையும் அடக்குவதில்
ஆண்மைத் தனம் காட்டும் ஆடவர்
சீதனம் கேட்கும் போது மட்டும்
ஏன் இந்தச் சின்னத் தனம்?

திருமணங்கள்
சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படலாமே தவிர
வரதட்சினை கேட்கும் - கொடுக்கும்
வர்க்கத்தில் அல்ல.

ஆண்களுக்கு கல்யாண ஆசை வந்தால்
தேட வேண்டியது
மணமகளையோ, குணமகளையோ தவிர
பண மகளை அல்ல.

'மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்'
சீதனம் கொடுக்கும் மனைவி அமைவது
இறைவன் கொடுக்கும் வரம் அல்ல
நீயாக தேடிக் கொள்ளும் சாபம்.

இல்லறம் என்பது நல்லறம்
சீதனம் கேட்டால் குறையும் அதன் தரம்
நீ செய்வது அறம் அல்ல - அதர்மம்!

சீதனம் கேட்காமல் இருக்க
நீ,
சூரியனாகவோ, சந்திரனாகவோ
இருக்க வேண்டியதில்லை
ஒரு மனிதனாக இருந்தால் போதும்!

*திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாட்டிலும் அண்டை நாடுகள் சிலவற்றிலும் பாலிய திருமணங்கள் ஒரு வழக்கமாக இருந்த காலம் உண்டு. அறியாப்பருவத்திலே நடக்கும் இத் திருமணங்கள், சம்பந்தப்பட்ட இருவருக்கும் ஒரு அர்த்தமற்ற சடங்காக நடந்து வந்தது. துரதிஷ்டவசமாகப் பையன் இறந்துவிட்டால் பெண்ணுக்கு விதவை என்ற பட்டம் இளமைப் பருவத்திலேயே கிடைக்கும். பூப்பெய்துமுன்பே திருமணங்கள் முடிந்து விதவைப் பட்டம் அலங்காரம் எல்லாவற்றையும் உடனே கலைத்துவிட்டு விதவைக் கோலமிட்டு மிகவும் கொடுமைப்படுத்தும் வழக்கம் சமுதாயத்தில் இருந்தது. இப்படியாக ஆசைகளை வளர்த்து உடனே கொடுமை செய்வதைப் பெண்களே முன்னே நின்று நிறைவேற்றியும் வைப்பார்கள். ஆனால் பாலிய திருமணத்தின்பின் பெண் இறந்துவிட்டால் ஆண்களுக்கு மறுமணமும் செய்து சமுதாயத்தில் நற்காரியங்கள் நடைபெறும்பொழுது அவர்களுக்கு முன்னணியில் இடமும்



பெற்ற பெண்கள் மிகவும் கொடுமைகளுக்கு உள்ளாவார்கள். அவர்களை வார்த்தைகளால் வசை பாடி வதைக்கும் வழக்கம் சமூகத்தில் பல காலமாக ஊறிப்போய் இருந்தது. பூப்பெய்திய பெண்ணை மணப்பெண்போல் அலங்கரித்து செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாம் சிறப்பாகச் செய்துவிட்டு அவளுடைய கொடுத்து கௌரவிப்பார்கள். இப்படியான ஓரவஞ்சனை பெண்ணுக்கு எதற்காகக் காட்டப்படுகிறது என்று சீர்திருத்தவாதிகள் வாதிட்டார்கள். இந்த வழக்கம் இப்பொழுது பெரும்பாலும் அருகிவிட்டது. பெண்ணுலகிற்கு விடிவு ஓரளவு ஏற்பட்டுவிட்டது. அரசாங்க நடவடிக்கைகளினால் பாலிய திருமணம் இப்போ சட்டப்படி குற்றமாகும். ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்திற்குப் புறம்பாக இப்படியான திருமணங்கள் இன்றும் இந்தியாவில் ஆங்காங்கே நடக்கின்றன.

விதவைகளுக்கு இழைக்கப்பட்ட இன்னுமொரு கொடுமை உடன் கட்டை ஏறுதல். இவ்வழக்கம் விதவை என்ற நாமத்தோடும் கோலத்தோடும் வாழ விரும்பாத பெண்களின் மனநிலையாலும் மற்றவர்களின் நிர்ப்பந்தத்தாலும் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்று. ஆனால் இப்படி ஒரு வழக்கம் ஆண்மக்கள் கடைப்பிடித்ததாக தெரியவில்லை. இதிலும் பெண்களுக்கு எதிராக கொடிய ஓரவஞ்சனை இருப்பதைக் காண்கிறோம். இப்படியான செயல்களை ஞாயப்படுத்துபவர்கள் வேதத்தில் அப்படி இருக்கிறது, உடன்கட்டை ஏறினால் கணவனுக்கு நற்கதி கிடைக்கும் என்று எத்தனையோ காரணங்களைக் கூறுவர். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இக்காரணங்களும் எழுத்து வடிவத்தில் உள்ள நூல்களும் பெரும்பாலும் ஆண்களினால் கொண்டு வரப்பட்டவை. காரணங்களைக் கூறுவோர் தற்கொலையும் கொலையும் செய்வது பெரிய பாவச்செயல்கள் என்று தாங்கள் வேறு இடங்களில் கூறியதையும் எழுதியதையும் மறந்துவிடுகின்றார்கள். முன்னுக்குப் பின் முரணானதும் மிகவும் கொடுமை யானதுமான உடன்கட்டை ஏறும் வழக்கமும் சட்டத்திற்குப் புறம்பானது என்று அரசாங்கங்கள் திருத்தங்கள் கொண்டு வந்துவிட்டன.

அரசாங்கம் சட்டத்தினால் கொடுமைகளைக் குறைத்தாலும், விதவைகள் வாழ விதவைகள் ஓய்வூதியம் என்று சிறு பண உதவி செய்தாலும் விதவைகளை வார்த்தைகளால் வறுத்து எடுப்பதும் நல்ல காரியங்கள் நடைபெறும்போது அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவைப்பதும் தொடர்கதையாகவே உள்ளது. படித்துப் பட்டங்கள் பெற்ற கல்விமான்கள், பெரும் பதவிகளில் இருப்போர், சமய அலுவல்களில் ஆர்வம் காட்டுவோர், ஏன்! சீர்திருத்தம் பேசுவோரும்கூட இன்னும் பழமைக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு மேற்குறிப்பிட்ட விதத்தில் காரியங்கள் செய்கிறார்கள். இது அவர்களுடைய மனம் இன்னும் வளர்ச்சி அடையவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. ஆண்கள் மட்டுமல்ல பெண்ணினமும் இப்படியான தவறுகளைச் செய்வதை நாங்கள் அடிக்கடி காண்கிறோம்.

தனித்து வாழும் விதவைகள் படும்பாடு மிகவும் கடுமையானது. இளம் விதவைகளை ஆண்மக்கள் எத்தனையோ வழிகளில் கொடுமைப்படுத்துகிறார்கள். தனிமையில் இருக்கும் பெண்களை தொந்தரவு செய்வது, காலநேரம் பார்க்காது அவர்களின் வீட்டிற்கு போக முயற்சிப்பது கடும் சொற்களாலும் கட்டுக்கதைகளாலும் அவர்களின் நடத்தையைக் குற்றம் சொல்வது போன்ற பல விடயங்கள் இவற்றுள் அடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் செய்யும் ஆண்கள் தங்களைப் பெற்றவளும், தங்களோடு கூடப்பிறந்தவளும், தங்களுடைய புத்திரிகளும் பெண்கள் என்பதைப் பல சமயங்களில் மறந்து விடுகிறார்கள். பாதுகாக்க வேண்டிய இடத்தில் பாவ காரியங்களைச் செய்யும் ஆண்களின் குற்றம் மன்னிக்க முடியாதது. குற்றம் இளைப்பவர்களில் எத்தனை பேர் விதவைகளை சீர்திருத்த முறையில் திருமணம் செய்து வாழ வைப்பார்கள் என்ற கேள்வியை இங்கு எழுப்ப வேண்டும். உரிய பாதுகாப்புக் கொடுத்தோ அல்லது சீர்திருத்தத் திருமணம் செய்தோ விதவைகளை சமுதாயத்தில் வாழ வைப்பவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

விதவைகளின் நெருங்கிய உறவினர்கள் ஆற்றும் செயல்கள் சிலவற்றையும் இங்கே குறிப்பிடலாம். அப்பெண்களிடம் பணமும் சொத்தும் இருந்தால் அவளதும் கணவரினதும் நெருங்கிய உறவினர்கள் பணத்தையும் சொத்தையும் அனுபவிப்பதற்குப் போட்டி போட்டுக் கொண்டு அப்பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில்லை. பெண்ணின் பிற்காலத் தேவைகளுக்கோ வைத்திய செலவுகளுக்கோ பணமும் சொத்தும் மிகுதி வைப்பதுபற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. பணமோ சொத்தோ இல்லாத இடத்திலும் அவை தீர்ந்துபோன சந்தர்ப்பங்களிலும் விதவைகளை நட்டாற்றில் விடவோ அல்லது தவறான வழிகளில் இட்டுச் செல்லவோ பலரும் தயங்குவதில்லை.

பல சந்தர்ப்பங்களில் விதவைகள் தங்களுக்குத் தாங்களே எதிரிகள் ஆகின்றார்கள். இவர்கள் கவனிக்க வேண்டியவற்றில் முக்கியமான ஒன்றை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தன் மனைவி சாரதாதேவியிடம் கூறிய பின்வரும் கூற்றில் காணலாம். "ஒரு அறையிலிருந்து மறு அறைக்குப் போவதுபோலத்தான் உடலில் இருந்து உயிர் போவது ஆதலால் நான் இறந்தாலும் மங்கல அணிகலங்களைக் கழற்ற வேண்டாம்". இது விதவைகள் கவனித்துப் பின்பற்றக்கூடிய காலத்திற்கு ஏற்ற ஒரு செயலாகும். மங்கல அணிகளும் பூவும் பொட்டும் விதவைகளுக்குப் பல சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பாகவும் இருக்கும். முக்கியமாக அடிக்கடி வெளியிற் செல்லும் பெண்கள் இப்படியான பாதுகாப்புத் தேடுவதில் தவறில்லை. இதைவிட மற்றவர்கள் திருந்த வேண்டும் என்று விரும்பும் விதவைகள் இவ்வழிகளிலாவது தாங்களே முன்னேற்றம் காண்பது சீர்திருத்தத்திற்கு உதவும் செயல்களாக இருக்கும்.

தொடர்ந்து நடைபெறும் வன்செயல்களால் விதவைகள் சமூகத்தில் மிகவும் அதிகமாகிவிட்டார்கள். பெண்ணினத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதற்கு அரச, அரச சார்பற்ற தாபனங்கள் இப்போ பல உண்டு. வாடும் மக்களுக்கு உதவ தொண்டர் தாபனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவும் மலிந்த காலம் இது. எமது நாட்டில் விதவைகள் அதிகரிக்கும் இக்காலகட்டத்திலே இத்தாபனங்களின் பணிகளில் விதவைகள் புனர்வாழ்வுக்கென்று ஒரு திட்டமும் அடங்கியிருத்தல் சாலச் சிறந்தது. சீர்திருத்தம், சுயதொழில், அனாதைக் குழந்தைகள் சுவீகாரம், சமூக சேவை போன்ற விடயங்கள் விதவைகளுக்குத் தெம்பும் புத்துயிரும் ஊட்டி அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கக்கூடிய விடயங்களாகும். இவை சரிவர நடைபெறாவிட்டால் விதவைகள் தங்கள் நல்வாழ்விற்குத் தாங்களே முன்னே நின்று செயலாற்றவேண்டி வரும். எனவே விதவைகளைத் துயிலெழுப்பி அவர்களின் நல்வாழ்விற்கு அவர்களே பாடுபடுமாறு அழைக்கின்றேன்.

"விதவைகளே நீங்கள் ஒரு அணியாகத் திரண்டு உங்களுக்காகப் போராடுங்கள். பழமைக்குள் முகத்தைப் புதைத்து கூட்டுக்குள் இருக்காமல் வெளியில் வாருங்கள். வீறு நடை போடுகின்ற சமுதாயத்துடன் நீங்களும் வீறு நடை போட்டு முன்னேறுங்கள். சீர்திருத்த எண்ணத்துடன் தெய்வ நம்பிக்கையையும் விடாது உங்கள் முன்னேற்றத்திற்கு அயராது உழையுங்கள். நாடும் சமூகமும் நீங்களும் முன்னேற இவை மிகவும் உதவியாக இருக்கும்".

திருமதி . விமலா மணிவாசகன்

சிலருக்கு கழுத்தில் இயல்பான நிறத்தை விட கருமை படர்ந்திருக்கும். சிலருக்கு முழங்கைகளிலும் கருமையாக சொர சொரப்பாக இருக்கும். பாலில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து பாதி எலுமிச்சம் பழத்தை எடுத்துப் பாலில் தோய்த்து கருமை உள்ள இடங்களில் பூசி பத்து நிமிடம் ஊறியபின் வெந்நீரில் கழுவிவர சில வாரங்களிலேயே கருமை நிறம் மாறிவிடும்.

மஞ்சள் கிழங்கை பச்சையாகக் கொண்டு வந்து நன்றாக இடித்து நல்லெண்ணையில் வதக்கி, பருக்கள் மேல் போட்டுவர சில நாட்களில் பருக்கள் மறையும். கொழுப்புச் சத்துக்களை குறைத்து உண்பதாலும் பருக்கள் மறையும்.

துளசி இலைச்சாறு எடுத்துத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்துவர பேன் தொல்லை நீங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரில் பெண்ணிடம் பணம் இல்லையேல்
# அப்பாவி அவளிற்கு மணம் இல்லையா?

பாரில் பெண்ணிடம் பணம் இல்லையேல்– அப்
பாவி அவளிற்கு மணம் இல்லையா?
பாரதி கண்ட புதுமைப் பெண்கள் –இப்
போரதில் வெல்ல வகை இல்லையோ?

இயற்கை தந்த அழகு இருந்தும்
இணையாய் கல்வி அறிவு இருந்தும்
பருவம் நிறைந்த குணம் இருந்தும்
பணத்தில் தானே வாழ்வு இருக்கு

காட்டில் உள்ள பறவைகள் விலங்குகள்
காதல் கொள்ள தடை இல்லை.
நாட்டில் வாழும் நாகரீக மனிதன்
நகைப்புக் கிடமாய் ஆவதும் ஏன்?

விஞ்ஞானம் விந்தைகள் வளர்ந்த போதிலும்
அஞ்ஞானம் இன்னமும் அழிய வில்லை
சும்மாவும் சீதனம் வாங்கா விட்டால்
தன்மானக் குறைவாய் நினைப்பதும் ஏன்?

"பெண்ணென்று பூமியில் பிறந்து விட்டால்
மிகப் பிழை இருக்குதடி தங்கமே"
பாரதி அன்று பாட்டில் சொன்னதில்
பாரதில் இன்றும் மாற்றம் இல்லையே

பெண்ணே பெண்ணிடம் சீதனம் கேட்பதும்
பெண்ணே பெண்ணிற்கு எதிரியாய் இருப்பதும்
பெண்ணால் பெண்ணே அழிவதும் இந்த
பூமிப் பெண்ணின் சாபம் அன்றோ!

பொன்னும் பொருளும் ஏனோ இந்த
பூமியில் என்றும் நிலைப்ப தில்லை
தெரிந்த பின்னும் மண்ணில் மாந்தர்
பேதையர் வாழ்வை குலைப்பதும் ஏன்?

உழைக்கும் மகளிர் என்றால் கூட
சமத்துவம் இன்னும் மலர வில்லை
கழுத்தில் தாலி ஏற முன்னர்
கணக்கில் பணத்தை காட்டு என்பார்

அன்று, தாயைப் பார்த்து பெண்எடு
தரத்தைப் பார்த்து வரவிடு என்றார்
இன்றோ, சீர்வரி பார்த்து பெண்எடு
சீதனம் எண்ணி வரவிடு என்றநிலையா?

பாரதி முதல் பாவேந்தரா் வரை
பாவையர் இழிநிலை பாடியும் இன்னும்
பாரில் பெண்ணிடம் பணம் இல்லையேல் –அப்
பாவி அவளிற்கு மணம் இல்லையே!

வாசவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமுதாயத்தில் ஆங்கில மொழியில் ஓரளவு உரையாடக்கூடிய ஆற்றல் ஒவ்வொருவருக்கும் இருத்தல் இன்றயமையாததாகும். ஒரு சிலருக்கு இத்தேவையேற்படாமல் போகலாம். ஆனால் பெரும்பாலும் வெளிநாடு செல்பவர்கள் இதன் அத்தியாவசியத்தை உணருகின்றனர். பல்வேறு இனத்தவர்களிடையே வாழும் நிர்ப்பந்தம் ஏற்படும்பொழுது இந்தக் குறைபாடு பலரிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகின்றது. இந்த அங்கலாய்ப்பு அதிகளவு மாணவர்களிடையேதான் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பல்கலைக்கழக வாயிலினுள் நுழைய முன்பு ஏதாவது சில வார்த்தைகளையாவது பேசப்பழகிக் கொள்ள வேண்டும் என்ற அவாவினால் பல மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்காளாகின்றனர். இக்குறையினை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஒரு சில உரையாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




ஒருவர் ஆங்கிலத்தில் உரையாடும் பொழுது தான் எதிர் நோக்கும் இலக்கணப் பிழைகள், சொற்பிரயோகங்கள் சம்பந்தமான ஐயப் பாட்டினை, ஆங்கிலம் நன்கு தெரிந்தவரிடம் தெளிவுபடுத்திக் கொள்ளும் வகையில் இவ்வுரையாடல்கள் அமைந்துள்ளன.

### உரையாடல் 1

சாந்தி: (என்னைப் போன்றவர்களும் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் எனது ஐயப்பாட்டினை தமிழிலேயே கேட்கின்றேன். நீங்கள் அதற்குரிய பதில்களை ஆங்கிலத்தில் தாருங்கள்) முதலில் என்னை ஒருவர் இன்னொருவருக்கு முதல் முறையாக அறிமுகஞ் செய்து வைக்கும்பொழுது நான் என்ன கூறவேண்டும்?

நண்பர்: You can just say "Hello!, How do you do?"

சாந்தி: And what does she answer?

நண்பர்: She also replies, "Hello!, How do you do?"

(நீண்ட நாட்களுக் குப்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஒருவரைச் சந்திக்கும் பொழுது இவ்வாறு சுகம் விசாரிக்கலாம்)

சாந்தி: "Hello, Kamala! I didn't see you for a long time. How are you?"

கமலா: "I am fine" or "very well", Thank you, How are you?" (If she is not keeping alright, she will say "Not very well" or "Not too well")

சாந்தி: How should I wish my friend on her birthday?

நண்பர்: You could wish her saying "Many happy returns of the day" or "Wish you a very happy birthday".

சாந்தி: How do we greet our friends at Christmas?

நண்பர்: We usually greet them as "Wish you a Merry Christmas" (use the word "Merry" with "Christmas") and at the New Year we say "A happy New Year" or "wish you a very happy and prosperous New Year".

(உமது உறவினரோ, நண்பரோ திருமணஞ் செய்தால் அல்லது பதிவுத் திருமணம் செய்திருந்தால் அவரை இவ்வாறு வாழ்த்தலாம்)

நண்பர்: (a) Meena! What wonderful news! Many, many congratulations on your engagement/ or registration! (b) What a surprise your wedding was! Congratulations! Well done! How wonderful! How lovely! I am so pleased for you! I am so happy for you! You deserve all the luck in the world! My blessings!

சாந்தி: இன்னுமொரு சந்தேகம். நேற்றைய தினம் ஒரு சில நண்பர்களுடன் நான் கதைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவர் கூறியது எனக்குத் தெளிவாகக் கேட்கவில்லை. நான் பதற்றத்தில் "If you please" என்று பொருத்தமற்ற பதிலளித்தேன்.

நண்பர்: Yes. It is very wrong. If you didn't quite hear what your friend said to you, you should have told her, "I beg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

your pardon" or "sorry, I didn't hear you properly".

சாந்தி: நான் ஒருவருக்கு உதவிசெய்யுமிடத்து, அவர் என்னைப் பாராட்டி நன்றி கூறும்பொழுது நான் என்ன கூறவேண்டும்?

நண்பர்: You may say, "You are welcome", or "not at all" or "That's alright" or "It's a pleasure".

உரையாடல் 2

சாந்தி: ஒரு வங்கியில் நடைமுறைக்கணக்கோ: (current account) அல்லது சேமிப்புக் கணக்கோ (savings account) வைத்திருந்தால், பிறருடைய உதவியின்றி பணத்தினை வைப்புச் செய்வதற்கோ அல்லது அதனைக் கணக்கிலிருந்து பெறுவதற்கோ உதவும் வகையில் சில உரையாடல்களைக் கூறமுடியுமா?

நண்பர்: Certainly! You may have to use the specific terms in your banking transactions.

A) நடைமுறைக்கணக்கில் பணத்தினைச் செலுத்தும் பொழுது:- Crediting or Depositing money into an account.

Customer: I would like to put some money (credit or deposit) into my current account. Can I have a credit slip (or Paying-in-slip)?

Cashier: Certainly madam; Here is the slip. Could you fill it up, please?

Customer: I really don't know how to fill it. Could you please help me?

Cashier: Of course, sure. Do you know the number of your account?

Customer: Yes, Here's my cheque book.

Cashier: How much money do you want to deposit?

Customer: Ten thousand rupees.

Cashier: Please sign here. Here's your receipt madam.

Customer: Thank you.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B) வங்கிக் கணக்கிலிருந்து ஒரு தொகைப்பணத்தை எடுக்கும் பொழுது: Withdrawing money from the savings account:

Customer: I would like to takeout (withdraw) some money from my savings account please.

Cashier: Yes, Madam, You will have to fill this withdrawl slip and sign on a two rupees stamp.

Customer: O.K. Here is the slip. I would like to withdraw Rs. 5,000/- from my savings account.

Cashier: Have you got your savings book and the Identity Card? Could you please sign here ............ and here? Thank you. How would you like to have the money?

Customer: In five hundred rupee notes please. Thank you. Bye.

C) வங்கியின் இன்னொரு கிளையில் காசோலை (cheque) மாற்றும் பொழுது Cashing a cheque on another branch of the bank.

Customer: I would like to cash a cheque, please.

Cashier: Certainly, Sir.

Customer: It is for six thousand rupees on my account with your Colombo 6 branch.

Cashier: Thank you (take the cheque). Could you please give me your Identity Card?

Customer: Here, it is.

Cashier: One moment, please. I will just check from the Colombo 6 branch.

Customer: How long will it take? I am in a hurry.

Cashier: Oh, only five minutes; It is OK. Could you sign it (endorse) at the back? Thank you. How would you like it?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Customer: In thousand rupee notes, please. Thank you, Bye.

உரையாடல் 3:-

## TELEPHONE CONVERSATIONS

தொலைபேசியில் நாம் உரையாடும்பொழுது மிகவும் பண்பாகவும், இனிமையான தொனியிலும் கதைப்பது மிக முக்கியமான அம்சமாகும். நம்முடன் பேசுபவர்களை எமது கடுமையான சொற்பிரயோகத்தினாலோ அல்லது கோபமான தொனியினாலோ பீதியடையச் செய்தலாகாது. அலுவலகங்களில் கடமைபுரிபவர்கள் இதனை மனதிற்கொள்ளுதல் வேண்டும்.

உரையாடலின்போது நாம் அவதானிக்க வேண்டியவை:

"Hello!" - Simply saying "Hello" is the ideal way of answering the phone. Business firms and companies, however, identify themselves when answering the telephone. "Samuel & Sons" or "Maharajahs" or "Good Morning", "Samuel & sons", "Mr.................speaking". "Can I help you"? The telephone conversation usually ends with each person saying "Good Bye" so each can say Good Bye at the end of the conversation.

### I. On the telephone:

The telephone bell rings.

Kamala: (answering phone) "Hello! This is 82882" (eight two double eight two)

Caller: Hello! May I or Could I speak to Sri, Please?

Kamala: Just a minute. I'll call him. (If he is not at home, you can say) I am afraid he is not in at the moment. May I know who is speaking there please? Would you like to leave a message?

Caller: No, Thank you. I will call him later. Bye.

### *II. Phone rings:*

Ranee: Hello!

Sita: Hello! May I speak to Rajee, please?

Ranee: Just a minute ...........Rajee.............Call for you.

Rajee: Hello!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sita: Hi! Rajee, This is Sita. Would you like to go for the dance recital tonight?

Rajee: Thanks. I would love to. I haven't been to a cultural show for a long time.

Sita: Good. I will pick you up around six o'clock. The programme starts at six thirty.

Rajee: Fine. I will be ready. (Phone clicks down).

### *III Wrong number*

Ravi: (Answering phone) Hello!

Sam: Oh! Could I speak to Kumar? or I would like to speak to Kumar?

Ravi: I am afraid you have got at the wrong number. This is 568143. (five six eight one four three)

Sam: Oh! I am so sorry.

Ravi: No, not at all or That's alright.

இவ்விதமான முறையினை நாம் தொலைபேசி உரையாடலில் பிரயோகிப்பது சாலச் சிறந்தது.

திருமதி தயாநிதி செல்வநாயகம்.

✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧

வெள்ளிசாமான்களை பெட்டியிலோ, பீரோவிலோ வைக்கும் பொழுது, கூடவே ஒரு துணியில் கற்பூரத்தைக் கட்டி போட்டால் பாத்திரம் கறுக்காது. மேலும் வெள்ளி பாத்திரங்களை சலித்த விபூதியில் துடைத்து மறுபடியும்மெல்லிய வெள்ளைத் துணியில் துடைத்தால் பளபளப்பாக இருக்கும்.

ஜரிகையுடன் கூடிய பிளபுஸ் பீஸில் பிளவுஸ் தைக்கும்போது ஜரிகைப் பக்கத்தை வழக்கமாக கைப்பக்கம் வைத்துத் தைக்காமல் தோள்பட்டையில் வைத்துத் தைத்தால் புதுமையாகவும் எடுப்பாகவுமிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TELL ME WHY?

Why is man so cruel?
Why does he cut down trees to make fuel?
Oh! I don't understand,
Why is man so cruel?
Why he can't be good?
And spare our trees,
Our beautiful, beautiful clovers,
Which he destroys with his hateful mower,
Our wonderful animals,
Which he kills for food
Why can't he give them love instead,
And they in turn
Will surely repay him
For what he's done-
Oh! I don't understand
Why is man so cruel
But there is hope,
For man to improve
If he would only cope
with one and all
Using weapons made of love
And thereby,
Make this world a better place
To live in

**by Mithuna Sirinivasan VII B,**
**Bishop Catho Girls' High School**
**Bangalore.**

# Caring And Sharing ?

Caring for Nature
Is sharing our bright future,
To prevent air pollution
Is our important mission,
planting a tree,
Keeps atmosphere pollution free
Caring for the ozone hole,
Can protect many a soul
Thus caring for Nature
Is sharing our bright future,
Caring for each others needs,
Is like sowing humanitarian seeds,
When they start growing,
Then we realise the importance of sowing
Thus earring for the health of all
Is sharing, to prevent human down fall

**By R. Anandaraman XB,**
**National English School,**
**Madras**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ADD TO YOUR KNOWLEDGE

* A promise should be given with caution and kept with care.

* Better be silent than speak ill.

* He that loses wealth loses much; But he that loses courage loses all.

* Excess of grief for the deceased is madness, for it is an injury to the living and the dead know it not.

* As men. we are all equal in the presence of death.

* What you leave at your death, let it be without controversy; else the lawyers will be your heirs.

* Who gossips to you, will gossip of you.

* How sharper than a serpent's tooth it is to have a thankless child.

* Evil thoughts intrude in an unemployed mind as naturally as worms are generated in a stagnant pool.

* The seeds of our punishment are sown at the same time we commit sin.

* A soft answer turneth away wrath but grievous words stir up anger.

* People are lonely because they build walls instead of bridges.

* There is more lovely, friendly and charming relationships, communication or company than a good marriage.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் விஞ்ஞானம்

அன்பு மருமக்களே!

ஒரு ஆண்டுக்குப் பின் மறுபடியும் உங்களுடன் தொடர்பு கொள்ள முடிந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி

இந்த இதழில் வியாபாரிகள் அதிக இலாபம் பெறுவதற்கு கையாளும் வழிகளைப் பற்றிப் பரிசீலிப்போம்

## மிளகாய்த்தூள் :

மிளகாய்த்தூள் செந்நிறமானது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. பார்வைக்கு மிளகாய்த்தூள் மாதிரி இருக்கக் கூடியது செங்கட்டித்தூள். பண ஆசை பிடித்த சில வியாபாரிகள் என்ன செய்வார்கள் தெரியுமா? இச்செங்கட்டித்தூளை மிளகாய்த்தூளுடன் கலந்து விற்பனைக்கு வைப்பார்கள். செங்கட்டி கலந்த மிளகாய்த்தூள் பார்வைக்கு நல்ல ரக மிளகாய்த்தூள் மாதிரியே இருக்கும். அப்பாவிப் பாவனையாளருக்கு இந்த வித்தியாசம் தெரியாது. நல்ல மிளகாய்த்தூள் என எண்ணிக் கடையில் உள்ள மிளகாய்த்தூளை வாங்கிச் செல்வார்கள். வீட்டிற்குப் கொண்டுபோய் இந்த மிளகாய்த்தூளை போட்டு கறி சமைப்பார்கள். உணவு அருந்தும் பொழுதுதான் தாங்கள் ஏமாந்து போனது அவர்களுக்குத் தெளிவாகும்.

இப்படி நீங்கள் எப்போதாவது ஏமாந்தது உண்டா? ஏமாந்திருந்தால் நீங்கள் மிளகாய்த்தூள் வாங்கிய வியாபாரியை மடக்க ஒரு வழி இருக்கிறது. அவரின் முன் ஒரு சிறு பரிசோதனை செய்து காட்டுங்கள். ஒரு சிறிய கண்ணாடிப் பாத்திரம் எடுங்கள். அவரின் கடையிலுள்ள மிளகாய்த்தூளில் சிறிதளவை அவர் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே அப்பாத்திரத்திற்குள் போடுங்கள். பிறகு அப்பாத்திரத்திற்குள் அரைவாசிக்கு நீர் விடுங்கள். மிளகாய்த்தூளையும் நீரையும் ஒரு கரண்டியால் கலக்குங்கள். ஐந்து நிமிட நேரம் கழித்துப் பாருங்கள். பாத்திரத்தின் அடியில் செங்கட்டித்தூள் வண்டல் இருக்கக் காண்பீர்கள். மிளகாய்த்தூள் நீரின் மேல் மிதக்கும். சிறிது பாரமான மிளகாய்த்தூள் துணிக்கைகள் நீரில் தொங்கிக் கொண்டு இருக்கும். செங்கட்டிதூள் வண்டலைக் கலக்காமல் அதன் மேல் உள்ள நீரை அதில் மிதந்தும் தொங்கிக் கொண்டும் இருக்கும் மிளகாய்த் தூளுடன் சேர்த்து இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்திற்குள் சாய்த்து ஊற்றுங்கள். முதல் கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள செங்கட்டித்தூள் வண்டலை அவ்வியாபாரியிடம் காட்டுங்கள். அவர் அசந்து விடுவார்.

ஒரு கலவையாக இருந்த செங்கட்டித்தூளும் மிளகாய்த்தூளும் நீர் விட்டுக் கலக்கியவுடன் எப்படி வெவ்வேறாகப் பிரிந்து மிளகாய்த்தூள் நீரில் மிதந்தும் செங்கட்டித்தூள் நீரின் அடியிலும் காணப்படும் எனத் தெரியுமா? இது ஒவ்வொரு பொருளுக்கும் தன்னியல்பாக உள்ள அடர்த்தியில் தங்கியிருக்கிறது. நீரின் அடர்த்தி $4^0$C சென்ரிகிரோட் இல் 1 கன சதமீற்றருக்கு 1 கிராம். (The density of water at $4^0$ C=1gram/cc) மிளகாய்த்தூளின் அடர்த்தி நீரின் அடர்த்தியை விடக் குறைவானது. செங்கட்டித்தூளின் அடர்த்தி நீரின் அடர்த்தியை விடக்கூடியது. ஒரு கலவையை நீரில் கலக்கிப் பின் அடைய விட்டால் அடையும்போது உள்ள துணிக்கைகளில் மிகவும் அடர்த்தி கூடிய துணிக்கைகள் முதலில் அடியில் அடையும். அதன் பிறகு இரண்டாவது அடர்த்தி கூடிய துணிக்கைகள் அதிக அடர்த்தி கூடிய துணிக்கைகளுக்கு மேல் அடையும். இப்படி அடர்த்தியின் அடிப்படையில் துணிக்கைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடையும். நீரிலும் அடர்த்தி குறைந்த பொருள்கள் நீரில் மிதக்கும்.

மிளகாய்த்தூளும் செங்கட்டித்தூளும் நீரில் கரையாத தன்மை கொண்டவை. ஆகவே அவற்றை மேற்கூறியவாறு பிரித்து எடுக்கலாம். நீங்கள் பிரிக்க விரும்பும் கலவையில் ஏதாவது ஒரு பதார்த்தம் நீரில் கரையக்கூடியதாக இருந்தால் அக்கலவையில் உள்ள பதார்த்தங்களை எப்படிப் பிரித்தெடுப்பீர்கள்.?

உதாரணமாக உப்பும் மண்ணும் சேர்ந்த கலவையை எடுப்போம். உப்பு நீரில் கரையும். மண் நீரில் கரையாது. எனவே எப்படி உப்பையும் மண்ணையும் பிரித்து வெவ்வேறாக எடுக்கலாம் எனப் பார்ப்போம்.

உப்பு பளிங்குக் கட்டியாகவும், மண் உப்புப் பளிங்கின் வெளிப்பகுதியில் மாத்திரமும் இருந்தால் சிறிதளவு உப்பு வீண்போவதைப் பொருட்படுத்தாமல் உப்பைக் கழுவி மண்ணை அகற்றலாம். ஆனால் மண், உப்புப் பளிங்கின் வெளிப் பகுதியிலும் உட்பகுதியிலும் இருந்தால் இவ்வாறு கழுவி மண்ணை அகற்ற முடியாது. சில சமயங்களில் உப்பு. பளிங்குக் கட்டியாக இல்லாமல் தூள் உப்பாக இருக்கும். தூள் உப்புடன் மண் கலந்திருந்தால் மண்ணைக் கழுவி அகற்ற முடியாது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. இச்சந்தர்ப்பங்களில் பின்வரும் முறையைக் கையாளுங்கள்.

ஒரு சிறிய கண்ணாடிப் பாத்திரத்திற்குள் உப்பும் மண்ணும் சேர்ந்த கலவையைப் போடுங்கள். அப்பாத்திரத்திற்குள் சிறிது நீர் விட்டு ஒரு கரண்டியால் நன்றாகக் கலக்குங்கள். பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து நிமிடங்கள் கலவையை அடைய விடுங்கள். உப்பு நீரில் கரைந்துவிடும். மண் நீரில் கரையாது. மண்ணின் அடர்த்தி நீரின் அடர்த்தியை விடக்கூடியது. ஆகவே மண் பாத்திரத்தின் அடியில் அடையும். உப்பு நீரில் கரைந்து ஒரு கரைசலாக இருக்கும். அடியில் அடைந்துள்ள மண்ணைக் கலக்காமல் அப்பாத்திரத்தைச் சரித்து உப்பு நீர்க் கரைசலை இன்னொரு பாத்திரத்திற்குள் ஊற்றுங்கள். பின்பு உப்பு நீர்க் கரைசலைக் கொதிக்க வையுங்கள். நீர் கொதிக்க வைக்கும்போது நீராவியாக மாறிவிடும். நீர் நீராவியாக மாறியபிறகு உப்பு பாத்திரத்தின் அடியில் இருக்கும்.

என்ன சத வீதத்தில் உப்பும் மண்ணும் கலக்கப்பட்டு இருந்தன என அறிய விரும்புகிறீர்களா? விரும்பினால் பின்வருமாறு செய்யுங்கள். ஈரமாக உள்ள மண்ணை உலர வைத்து எடுங்கள். அதே மாதிரி உப்பையும் உலரவைத்து எடுங்கள். பின்பு உலர்ந்த மண்ணின் எடையையும் உலர்ந்த உப்பின் எடையையும் ஒரு சமையலறைத் தராசின் உதவியுடன் கணித்துக் கொள்ளுங்கள்.

## கணக்கிடுதல்:

மண்ணின் எடையையும் உப்பின் எடையையும் பின்வருமாறு எடுத்துக் கொள்வோம்.

மண்ணின் எடை = $W_1$ கிராம் = 80 grams
உப்பின் எடை = $W_2$ கிராம் = 120 grams

மண்ணும் உப்பும் சேர்ந்த எடை
$W_1+W_2$ கிராம் = 200 grams

மண்ணின் சத வீதம்

$$\frac{W_1}{(W_1+W_2)} \times 100 = 40\% \text{ by weight}$$

உப்பின் சத வீதம்

$$\frac{W_2}{(W_1+W_2)} \times 100 = 60\% \text{ by weight}$$

உப்பு – மண் கலவையைப் பிரித்து உப்பையும் மண்ணையும் வெவ்வேறாக எடுத்த மாதிரி சீனி–மண் கலவையைப் பிரித்து சீனியையும் மண்ணையும் வெவ்வேறாக எடுக்கலாம். இதே போல் சர்க்கரை – மண் கலவையைப் பிரித்து சர்க்கரையையும் மண்ணையும் வெவ்வேறாக எடுக்கலாம்.

நீங்கள் இப்பரிசோதனைகளை உங்கள் வீட்டில் செய்து பார்க்கலாம். பரிசோதனை செய்யும்போது நீங்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். கண்ணாடிப் பாத்திரங்களை உடைக்கக் கூடாது. நீரைக் கொதிக்க வைக்கும்போது நீங்கள் சூடு வாங்கிக் கொள்ளக்கூடாது

பரிசோதனை மூலம் படிப்பது மனதில் நன்றாகப் பதியும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கக்காத்திருக்கும் உங்கள் மாமி

***திருமதி சிவகாமி அம்பலவாணர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் அமைத்த மேடையிலே!

*தியானத்தில் இருந்த இறைவனின் மனத்தில் ஓர் ஆசை*

*பிறந்தது ! பிறந்தது ! பிறந்தது !*

*உலகம் என்னும் மேடையை*

*படைத்தான்! படைத்தான்! படைத்தான்!*

*அதில் புல் முதல் ஆல மரம்வரையும் புழு முதல் மனிதன்வரையும்*

*தோற்றுவித்தான்! தோற்றுவித்தான் !தோற்றுவித்தான்!*

*அதோடு பாறையில் இருந்து மண்வரையும் ஜடப் பொருள்களையும்*

*உருவாக்கினான் ! உருவாக்கினான் ! உருவாக்கினான்!*

*அவற்றில் பகுத்தறிவுபெற்ற மனிதனிடம் ஆளும் பொறுப்பை*

*ஒப்படைத்தான் ! ஒப்படைத்தான் ! ஒப்படைத்தான்!*

*ஐயகோ! காலை தினசரியை எடுத்து*

*வாசித்தால்! வாசித்தால்! வாசித்தால்!*

*பல நாடுகளில் குண்டு வெடிப்புகள் யுத்த விபரங்கள்தான் பார்க்க*

*முடிகின்றது! முடிகின்றது! முடிகின்றது!*

*பல கொள்ளைகளையும் கொலைகளையும் கற்பழிப்புக்களையும்*

*வாசிக்கின்றோம் ! வாசிக்கின்றோம் ! வாசிக்கின்றோம்!*

*மனிதனின் மனிதத்தன்மை எங்கே*

*போய்விட்டது! போய்விட்டது! போய்விட்டது!*

*அவனிடம் எங்கு இருந்து அரக்க குணம் வந்து*

*குடி புகுந்தது! குடி புகுந்தது! குடி புகுந்தது !*

*அவன் சுயநல வாதியாக*

*மாறிவிட்டதாலா! மாறிவிட்டதாலா ! மாறிவிட்டதாலா!*

*பதவிகள் மீது கொண்ட*

*ஆசையாலா ! ஆசையாலா! ஆசையாலா!*

*மற்றவர்மீது கொண்ட பொறாமையாலா, எதனால்*

*வந்தது ! வந்தது ! வந்தது!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மத மொழி வேறுபாடின்றி பிணங்கள்
குவிகின்றன! குவிகின்றன! குவிகின்றன!
பல ஏழை எளிய அப்பாவி
மக்கள்! மக்கள்! மக்கள்!
அங்கவீனர்களாகவும் அகதிகளாகவும்
ஆகிவிட்டார்கள் ! ஆகிவிட்டார்கள் ! ஆகிவிட்டார்கள்!
அரச சொத்துக்களும் பல மக்களின்
சொத்துக்களும்! சொத்துக்களும் ! சொத்துக்களும்!
பொருளாதாரமும் கல்வியும் அழிந்து
விட்டது ! விட்டது !விட்டது!
இலங்கை நாட்டு மக்கள்
எல்லோரும்! எல்லோரும்! எல்லோரும்!
ஒருதாய் பிள்ளைகள்போல்
இதற்கு! இதற்கு! இதற்கு!
ஒரு முடிவு காண
வேண்டாமா! வேண்டாமா! வேண்டாமா!
புத்த மதம் தழைத்து ஓங்கி வளர்ந்த இந்த மணிபல்லவ
நாட்டிலே! நாட்டிலே! நாட்டிலே!
பூலோக கயிலாயம் என்று
போற்றப்படும்! போற்றப்படும்! போற்றப்படும்!
திருக்கோணசர் குடியிருக்கும் புண்ணிய
பூமியிலே ! பூமியிலே ! பூமியிலே!
சமாதானம் எப்பொழுது பிறந்து தவழ்ந்து
வரும்! வரும்! வரும்!

ஓம் சிவாய நம! ஓம் சிவாய நம ! ஓம் சிவாய நம!

திருமதி விமலா மணிவாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## What is Cancer?




The human body is composed of millions of cells. Each cell contains a nucleus which controls its growth. This growth and multiplication of cells occurs in an orderly manner. However, at times cell begins to divide and multiply in a disorderly and uncontrollable manner, stealing nourishment form the surrounding tissues and building up clusters of useless cells and spreading to other parts of the body. Such a mass of cells is called a cancer.

## How is cancer spread?




Cancer spreads within the body in three ways.

a) Infiltration - the cancer cells grow to surrounding areas spreading between normal cells and damaging them.

b) By blood- Cancer cells may be carried by the blood to other parts of the body.

c) By Lymphatic System- Cancer cells many be carried to various parts of the body through this system.

## Is cancer communicable Disease?

No. One cannot get cancer by association with a person who has cancer or nursing a patient having cancer.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Is cancer Hereditary?

No. But there may be a tendency for individuals to develop certain types of cancer when there is a history of cancer in one or both parents. One should in such circumstances be more alert to any danger signals that may appear.

## Who falls Victim to Cancer?

Cancer can affect any person irrespective of age, sex social status, etc., However, the middle and elderly age groups are more prone to develop the disease.

## What are the commonest types of cancer is Sri Lanka?

1) Oral cancer or cancer of the mouth.
2) Cancer of the cervix or neck of the womb
3) Cancer of the breast.

## Is Cancer Curable?

Yes, Cancers are curable if detected early. Cure rate of certain cancers are in the region of 80%.

## Oral Cancer

Cause of oral cancer is not known, But there are certain factors associated with oral cancer. They are

1) Betel Chewing
2) Keeping the quid in the mouth during sleep
3) Smoking
4) Alcohol consumption
5) Chronic irritation in the mouth
6) An ulcer that does not heal

## Symptoms

1) A white or reddish patch in the mouth
2) A growth in the mouth
3) An ulcer that does not heal

Symptoms such as difficulty in opening the mouth, pain, loose teeth ill fitting dentures, difficulty in swallowing etc. appear late.

## Detection

A check up by a qualified dental surgeon should reveal any suspected lesion. Once detected, a small portion of tissue from the affected area is examined (biopsy) and the diagnosis confirmed.

## Treatment

a) Surgery
b) Irradiation
c) Drugs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Prevention

1) Avoid chewing betel, particularly with tobacco

ஆமா, இந்த அதிபர்களைப் பற்றி அவங்க பங்களிப்பைப் பற்றி கொஞ்சம் சொன்னா நல்லாயிருக்கும் !

சொல்லுகிறேன் கேளுங்கோ !

பாடல்
"ஒழுக்கம் பேண வேண்டும் – நல்ல
ஒழுக்கம் பேண வேண்டும் – நாம்
சிறந்த வாழ்வு காண – என்றும்
ஒழுக்கம் பேண வேண்டும்.

கல்வி அறிவு வேண்டும் – அதனால்
நன்மை பெருக வேண்டும் – நம்
நடை யுடை பாவனையில் – ஓர்
அடக்கம் தோன்ற வேண்டும் !
ஒழுக்கம் பேண வேண்டும் – நல்ல
ஒழுக்கம் பேண வேண்டும்"

இப்படி கல்விப் போதனையோடு ஒழுக்கத்துக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கண்டிப்போடு செயற்பட்டவர் காயத்ரி அவர்கள்.

அப்படியா?

ஆனால் மிகச் சுறுசுறுப்பாகச் செயற்பட்ட இவர் மிகச் சொற்ப காலமே பதவியில் இருந்தார்.

ஒரு குரல்
அப்போ அடுத்து வந்தவர் செல்வி. முத்து அச்சயாவா ? அவரா? ஒப்பந்த அடிப்படையில் இந்தியாலில் இருந்து அழைக்கப்பட்டவர் ?

ஒரு வருட காலந்தான் பணியாற்றினார். எட்டாம் வகுப்புவரைதான் அப்போது வகுப்புகள் இருந்தன. மாணவிகள் எஸ்.எஸ்.சி. வரை படிக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியவர் இவர்தான்.

அப்படியா ? அவர் எப்படி?
தோற்றமோ பளிங்குபோல் கண்ணாடி–
அவ உள்ளமோ வைரக் கற்கள் தானடி !

சந்தோஷந்தான் ! திருமதி. ஜெம்மாராணி சிற்றம்பலம் எப்படி ?

இவரது பதவிக்காலமும் மிகக் குறுகியதுதான். ஆனாலும் !
ஆனாலும் !

இவர்களுடைய ஆங்கில இலக்கிய வகுப்புகள் சிறப்பானவை என்பதைச் சொல்லத்தானே வேண்டும் ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமா ! விட்டுட முடியுமா என்ன ? அடுத்து வந்தவர் திருமதி. கிளரா மொற்வாணியா? எப்படி அந்த அம்மா ?

பாடல்

"கல்வியின் ராணி அம்மா – கிளரா
கேள்வியில் வல்லா ரம்மா – அவ
அமெரிக்க நங்கை அம்மா – அவரும்
அயரா துழைத்தார் அம்மா !

தமிழ்மொழி தமிழ்க்கலையை வளர்த்தார் – அந்நேரம்
ஆங்கிலத்தின் அருமையையும் உரைத்தார்
தமிழ்மகளிர் கல்வியில் சிறப்படைந்தார் – பெரும்
பொறுப்பான பதவிகளும் பெற்றார் – அம்மா
பொறுப்பான பதவிகளும் பெற்றார் – அம்மா"

ஒரு குரல்

ஆகா ! ஆகா ! அப்புறம் ?

இவருக்குப் பின்னர் 1948ம் ஆண்டு அதிபர் பதவியை அலங்கரித்தவர் தான் திருமதி. சரோஜினி ராவ்.

ஒரு குரல்

இவர் எப்படி ? இவர் சாதனை என்னவோ? என்ன அப்படிக் கேட்டுட்டீங்க ? நிச்சயமாய் அவரது காலம் கல்லூரிக்கு ஒரு சாதனைக் காலந்தான் !

ஒரு குரல்

அப்படியா ? அப்படியென்றால் திருமதி. சரோஜினி ராவ் ?

பாடல்

"அன்பும் பணிவும் நிறைந்தவராம்
அறிவும் துணிவும் கொண்டவராம்
வீரமும் இவர்க்கு இயல்பாகும்
பாரதியின் புதுமைப் பெண்ணாவார்
பாரதியின் புதுமைப் பெண்ணாவார்"

ஒரு குரல்

என்ன ! அவரே ஒரு புதுமைப் பெண்ணுங்களா ?

ஆமா ! நிமிர்ந்த் நன்னடை. நேர் கொண்ட பார்வை. தெளிந்த ஞானச் செருக்குமுள்ளவராகத்தான் திருமதி. சரோஜினி ராவ் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலே வலம் வருவார். மாணவிகளும் புதுமைப் பெண்களாக மலர வேண்டும் என்று பாடுபட்டார். மாணவிகளும் தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கவின்கலைகள், மனை இயல் ஆகிய பாடங்களைக் கற்க வழியேற்பட்டது. மாணவிகள் தொகையும் 1100க்கும் மேலாக அதிகரித்தது இன்னொரு விஷயம் தெரியுமா ?

தெரியாதே ! என்ன விஷயம் ?

கல்லூரி நிலப்பரப்பிலே புதிய கட்டிடங்களைக் கட்டவும், சுற்றுமதிலைக் கட்டவும், ஒரு களியாட்டு விழாவை அவரது காலத்திலேதான் நடத்தினா.

என்ன களியாட்டு விழாவா ?

ஆமா ! அதுமட்டுமல்ல அதோட ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நடத்தினார்கள்.

ஒரு குரல்

அட நம்ம லொத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே கல்லூரியின் முன்னேற்றங்கள் கருதி முற்றுமுழுதாய்த் தன்னை அதிலே ஈடுபடுத்திப் பாடுபட்டவர் திருமதி. சரோஜினி ராவ் அவர்கள். அவருடைய காலத்திலே கல்லூரியிற் படித்த பழைய மாணவிகளுக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வராமற் போகாது ?

என்ன சம்பவம்? சுவையான சம்பவமாயத்தான் இருக்கும்! சொலுங்கோ ! சொல்லுங்கோ !

அது மாங்காய் பிடுங்கிய சம்பவம் !

மாங்காய் பறிச்சதா ? நிச்சயமாய் பச்சை மாங்காயாகத் தான் இருக்க வேணும் ! அப்போ இது ஒரு புளிச் சுவைக் கதை ! என்ன, நான் சொல்றது சரிதானே ? சொல்லுங்கோ அந்தச் சம்பவத்தை !

ஒரு முறை கல்லூரி வளவிலே நின்ற மாமரங்களில் நிறையக் காய்கள் காய்ச்சுது ஒரு நாள் மாணவிகள் சிலபேருக்கு மாங்காய் சாப்பிடுகிற ஆசை வந்தது. நல்ல வேளை மாணவிகள் பருவம்.

ஓஹோ ! அதற்குப் பிறகு என்ன செய்தாங்க !
குரங்குக் குட்டிகள் மாதிரிக் கடகடவென்று மரத்திலே ஏறி மாங்காய்களைப் பிடுங்கிக் குவிச்சிட்டாங்க ! குவியல் குவியலாய் மாங்காய்கள்.

வாய் ஊறுது அப்புறம் ?

அதிபர் சரோஜினி ராவ் வந்தார்! பார்த்தார்! அவருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. இப்படியும் ஒரு குரங்குச் சேட்டையா ? என்று துள்ளிக் குதித்தார்.....

அது தானே... பிறகு என்ன நடந்தது குரங்குக் குட்டிகளுக்கு ?

அவ்வளவு பேரையும் கல்லூரி வளவுக்கு வெளியே பிடிச்சு விட்டிட்டார் !
அடடா ! சரியான தண்டனை என்ன ... உங்களை ஒன்று கேட்கலாமா ?

கேளுங்கோ !

வெளியிலே நின்ற கூட்டத்திலே நீங்களும் ஒரு ஆளா ? .........

அடுத்து அதிபராகக் கடமை செய்தவர் திருமதி விமலா ஆறுமுகந்தானே ? அவரது நிர்வாகம் எப்படி ?

பாடல்

"கல்லூரி முன்னேற்றம் கருத்தானது
இவரது கருத்தானது
கல்லூரி முதல் தரத்தை எட்டிப் பிடித்தது
எல்லோரும் மெச்சும்படி
படிப்பும் உயர்ந்தது
பல்கலைக் கழகம் செல்ல
வழியும் பிறந்தது
பிரார்த்தனை மண்டபமும்
உருவாகி எழுந்தது
விசாலாட்சி அம்மைபெயர்
பொறிக்க முடிந்தது
விடுதிகள் மேலும் சில
கட்ட முடிந்தது – அதில்
நிம்மதியாய் இருந்து படிக்க
வாய்ப்பும் கிடைத்தது – நல்ல
வாய்பும் கிடைத்தது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை ! அருமை ! விமலா அம்மையார் போன்ற பெரியார்களின் தன்னலமில்லாத சேவையாற் தானே யாழ்ப்பாணம் கல்வித்துறையிலே தனிச் சிறப்புக் கண்டது அடுத்துஅதிபராக வந்தவர் செல்வி பத்மாவதி இராமநாதன் தானே ?

ஓ ! அவர்கள் தான் ! அவரும் அதிபர் சரோஜினி ராவின் நிர்வாகத்தில் இளம் ஆசிரியராக கடமையாற்றியவர்தான் !

அப்படியா ?

ஆம் ! இவருடைய சேவைக்காலம் கல்லூரி வரலாற்றிலே ஒரு பொற் காலம் என்று பெருமையாகக் கூறலாம் !

எப்படி? அதைக் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லுங்கோ !

கல்லூரியை முன்னேற்றுவதே தமது பிறவிப் பெருங்கடன் என்று தமது வாழ்வை அதற்காக அர்ப்பணித்தவர் செல்வி பத்மாவதி இராமநாதன். இவரது காலத்திலேதான் எங்கள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பூரணமான வளர்ச்சியைப் பெற்றது அகில இலங்கையிலும் புகழைப் பரப்பியது.

அப்படியா ?

இவர் காலத்திலேதான் அதாவது 1976ல் இருந்து 1986 வரை உள்ள காலம் விஞ்ஞான கூடம். தற்போதைய காரியாலயம், வகுப்பறைக் கட்டிடங்களைக் கொண்ட மேல்மாடிக் கட்டிடம் எல்லாம் கட்டப்பட்டன.

அப்போ ?

மாணவிகள் கல்வியிலும் விசேஷ கவனம் செலுத்தினார். இதனாலேயே மாணவிகள் தொகையும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு உயர்ந்தது. பல்கலைக் கழகம் செல்லும் மாணவிகள் தொகையும் அதிகரித்தது. சகல போட்டிகளிலும் மாணவிகள் பங்குபற்றி வெற்றி பெற வைத்தார்.

பாடல்

"செந்தமிழ் நாட்டுப் பெண்மணியாய்
சேவற் கொடியோன் பக்தையுமாய்
நம் தமிழ் வளரப் பாடுபட்டார்
நங்கை பத்மா இராமநாதன்
உயர்வுக்காக உழைத்து நின்று
உரிமையோடு உயர்ந்து நின்றார்
கட்டுப்பாடு ஒழுக்கம் எல்லாம்
கருத்துடனே காத்து நின்றார்

கல்வியும் ஒழுக்கமும்
இரு கண்கள் என்றார்
நல் லாசிரியராய் வந்து
நெஞ்சினில் நிறைந்தார்

பல்கலை ஓம்ப
வழியும் செய்தார்
நமது கல்லூரி
முதல்தரக் கல்லூரியென்று
புகழ்பெற வைத்துச் சென்றார்"

சரி, சரி செல்வி. பத்மாவதி இராமநாதனுக்குப் பிறகு அதிபராய் வந்தவர் யார்?

அவர்தான் அதிபர் திருமதி திவ்விய சிரோன்மணி நாகராஜா இந்த அதிபரும் தமக்கு முன்னே சிறந்த பணியாற்றி இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் கல்லூரியை முதல்தரமான ஒரு கல்லூரியாக உயர்த்த அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்ட அதிபர்களின் வழியில் கல்லூரியை நடத்திச் செல்ல அயராமற் பாடுபட்டார். இவர் காலத்திற்தான் அதாவது கடந்த வருடந்தான் கல்லூரி தனது பொன் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. இவர் பணி போன்று இனிவரும் காலத்தில் வருபவர்களின் பணியும் சிறக்க வேண்டும். அதனால் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஒளிவீசிப் பிரகாசிக்க வேண்டும்.

இவர் பின் வந்தவர் தற்கால அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ். இவர் காலத்திலும் எதிர் காலத்திலும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்விச் செல்வமும் ஏனைய சிறப்புக்களும் பெற்று வாழ வேண்டும் என்று யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளான நாம் இப்பொன்னான சந்தர்ப்பத்தில் மனதார வாழ்த்துவோம் !

பாடல்

"யாழ் இந்து மகளிர் கல்லூரி வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க
நேர்மை கொண்ட மாணவிகள் வாழ்க
வாழ்க
கல்வி கலைகள் பண்பு கொண்டோர்
வாழ்க வாழ்க
காணி ஈந்து வாணி கோயிலாக்கிய
விசாலாட்சி அம்மையார் வாழ்க வாழ்க
கால நேரமின்றிக் கடுமையாய் உழைத்த
ஆசிரியர் நாமம் வாழ்க வாழ்க வாழ்க
அருளும் பொருளும் அன்பும் அளித்து
உதவிய
அன்பர்கள் சங்கங்கள் வாழ்க வாழ்க
எங்கும் நிறைந்து எல்லாம் அறிந்த ஈசன்
வாழ்க
அன்பும் அருளும் பண்பும் நல்கும் சக்தி
வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க"
விருப்புடனே வந்திருந்து வில்லுப் பாட்டுக்
கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம் –
எங்களை
மதிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
(விருப்புடனே ...)

வணக்கம் வணக்கம் வணக்கம்.

**எழுதியவர்:**

திருமதி அன்னலக்ஷ்மி இராஜதுரை

******

**நிகழ்ச்சித் தயாரிப்பு:**

செல்வி சற்சொருபவதி நாதன்

**வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பங்கு பற்றியவர்கள்:**

*செல்வி சற்சொருபவதி நாதன்*
*திருமதி லீலாவதி இரத்தினசிங்கம்*
*திருமதி பத்மா சோமகாந்தன்*
*திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்*
*திருமதி தயாநிதி செல்வநாயகம்*
*திருமதி அபிராமி கயிலாசபிள்ளை*
*செல்வி சிவமலர் சுப்பிரமணியம்*
*திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்*
*திருமதி பொன்மலர் கந்தசாமி*
*திருமதி நாகேஸ்வரி கனகசபை*
*திருமதி கௌரி தேவசேனாதிபதி*
*திருமதி விமலா மணிவாசகன்*
*திருமதி சிவகாமி அம்பலவாணர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAUGH FOR A WHILE

"Joe"?, a friend asked a young businessman, " how do you expect to accomplish anything at your office with three good looking stenographers around?" "Easy", was the confident answer. 'I' ll give two of them the same day off".

******

A woman on a train describing her holiday to a man in the next seat, mentioned that she had visited San Jose. "You pronounce that wrong" said the man. "It's San Ho-Say. In California all the J's are pronounced as H's". Dismissing the point? he asked, "when were you there?"

The woman thought a moment, then answered, "In Hune and Huly".

"I see you have given up teaching your wife to drive". "Yes, we had an accident"

"You did! what happened"'
"I told her to release the clutch and she took her hands off the wheel".

A father was telling a neighbour how he stopped his son from being late to high school.

"I bought him a car" he said.
"How did that stop him from being late?", the neighbour asked.
"Why, he's got to get there early to find a parking place".

A small boy was asked by his parents to pray for his new baby brother. "God bless Mummy? God bless Daddy? God bless my new baby brother", he said. "Make him love me and be friendly, God - and get him out of here!"

"Daughter," said the mother, "didn't I tell you not to let strange men come to your apartment? You know things like that worry me."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Don't be ridiculous, mother" laughed the girl. "I went to his apartment this time. Now? Let his mother worry!"

Disappointed that her teen-age daughter shows no interest in cooking and house- keeping, my neighbour remonstrated, "But, dear, don't you want to get married some day?"
"Sure, mom," the girl agreed. "But haven't you ever heard of on-the job training?"

"I" m sorry, Sir," said the telephone operator, "but that number has been taken out."

"Oh, is that so?" The man replied. "We'l, can you give me any information as to just who took her out?"

A little boy? taken to the ballet for the first time, watched curiously as the dancers cavorted about on their toes.

"Mummy," he whispered loudly, "Why don't they just get taller girls?"

We just heard about a little boy who said to his teacher, "I ain't got no pencil"?.

She corrected him at once: "It is I don't have a pencil: 'You don't have a pencil.' "We don't have any pencils". "They don't have any pencils." Is that clear"? "No," said the bewildered child. " What happened to all them pencils?"

From the Pages of Reader's Digest.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

## - ஓர் அரிய படைப்பு

வட பகுதியில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பெண்களுக்கென சைவ சமய சூழ்நிலையில் கல்வி கற்பிக்க ஒரு பாடசாலை இல்லாதது நீண்ட காலமாக ஒரு பெரிய குறையாக இருந்தது. இக்குறையை நிரப்பு வதற்கு ஒரு ஒளியாக 1943 ஆம் ஆண்டு வந்து உதித்தது தான் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி. இக்கல்லூரி வெகு விரைவாக வளர்ந்து மிகவும் இக்கட்டான அண்மைக் காலங்களில் எமது பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அளப்பரிய தொண்டு ஆற்றி வந்துள்ளது. 1993ஆம் ஆண்டு பொன் விழாவும் கண்ட கல்லூரி, இரண்டு ஆண்டுகளின் பின் யாழ்ப்பாண மக்களின் கல்விக்கு ஏற்பட்ட பாரிய சவாலையும் மக்களுடன் சேர்ந்து எதிர் நோக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

சவால்களும் தேவைகளும்

மனித வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்திக்கும் விடயங் களாகும். அவற்றை எதிர் கொண்டு தாண்டுவதற்கு நாம் ஒன்றுபட்டு புது அமைப்புகள் மூலமும் உழைக்க வேண்டிய காலகட்டம் இதுவாகும். எமது மக்களின் கல்விக்கு ஏற்பட்ட தாக்கத்தின் எதிரொலியே வட-கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம் மேளனமாகும். கடந்த தைப் பொங்கல் தினத்தன்று உருவாகிய எமது சம்மேளனம் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. கல்வி தொடர்பான பாரிய பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுக்கும் அரசுக்கும் தெரிவிப்பது ஒரு முக்கியமான பணியாகும். இது தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மேளனமும் ஏனைய அமைப்புகளும் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக இடம்பெயர்ந்த மாணவர்கள் தாங்கள் தற்போது இருக்கும் இடங்களிலேயே கல்வியைத் தொடரக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

சம்மேளனம் உருவாவதற்கான பூர்வாங்க அலுவல்களைச் செய்வதிலும், உருவானபின் அதைச் சரிவரக் கொண்டு நடத்துவதிலும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளையின் அங்கத்தவர்கள் ஏனைய சங்க அங்கத்தவர்களுடன் அயராது உழைத் துள்ளனர். இதற்கு சம்மேளமும் மாணவ சமூகமும் என்றென்றும் நன்றி உடையவர்களாக உள்ளோம்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்பு கிளையின் ஒரு அரிய படைப்பு யாழ் நாதம் ஆகும். இனிய தமிழிலும், ஆங்கிலத்திலும் பல்வேறு கதைகள், கட்டுரைகள் முதலியன யாழ் நாதம் இதழ் 1 இல் வெளி வந்ததையும், அந்த இதழ் வெளியிடும்போது நடந்த வில்லுப் பாட்டு நிகழ்ச்சியையும் பலரும் மிகவும் பாராட்டி உள்ளனர். யாழ் நாதம் 2, அதற்குப்பின் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளை ஆற்ற உத்தேசிக்கும் நற்பணிகள் எல்லாம் மிகவும் சிறப்பாக அமையவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வட-கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**கலாநிதி வி. அம்பலவாணர்.**
தலைவர்
வகீபிபாபமாசம்
19.03.1996.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Have you heard this one?

He was going to visit his proposed bride and prospective in-laws. A little nervous as the girl was English trained, he poured over Emily Post to make sure of, good manners politeness etc. Came the day. Our man and his party were received well. They were seated round and who should serve tea - the bride-to-be herself. Our hero hurriedly brought to mind all that he went through in Emily Post and as the blushing girl offered him the tea, he blurted out "Thank you Sir or Madam as the case may be.

There are many ways to become an angel. Here is a quick method. The young wife kept pleading with her husband to allow her to drive. "Oh be an angel and let me drive" she cooed. Unable to resist the sweet thing he obliged and became one.

The youngster was chosen from the preschool to represent his class for a 'T.V. interview of children under five. The scamp he was, he stood with an air of defiance - hands akimbo. Asked the interviewer. "So you are the one today"

Yes.

Why did your teacher choose you - Pat came the reply.

I am the one my teacher would most want to be out of the class for a while at least!"

In this same programme Art Link Letter - asked a sweet cherubic little angel

Honey why did your teacher choose you'?

That's a secret.

Comm on - tell me - secretly

(whisper) I am the teacher's pet.

Yet another little scamp shocked the interviewer when he asked him whether there was anything new in his neighbourhood.

Yes.

What is it?

My mother has delivered more babies in one week than any other mother in the neighbourhood.

Stunned Art Link letter said hoarsely

How?s that?

She is a midwife.

The next one came and stood gallantly before the camera.

Art Link letter was more cautious -

Hello! How many in your family? Parents and eight of us



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Oh- Do you like it!

Yes.

Why?

Each one has someone to boss over said the cute one!

Perhaps this one tops the list.

Interviewer - Do you think you'll be promoted. said the little boy - Oh sure.

Interviewer:- How can you be so sure? boy. Oh boy, you should see the principal whistling at my mom!

Source: Kids say the darnest things By Art Link Letter.

And here are some definitions and howlers from my own experience:

1) Celibacy is a kind of brain desease.

2) The equator. in a menageric Lion running round the earth.

3) I went to the Zoo and saw a lion. After sawing the lion I went to saw an elephant..

4) The stomach is situated north east of the pancreas.

5) When our teacher gets angry she loses her temperature

**Mrs. Thlilaka V.Wijeyaratnam.**

## உள்ளத்தின் ஓசைகள்..........

பொண்ணுக்கு நகை, புடவை, பண்டபாத்திரம் எல்லாம் வாங்காதீங்க... சரி அதோட கல்யாணத்துல சத்திரம், சாப்பாடுன்னு வாரி இறைக்கற பணத்துல, பாதியை பொண்ணுமேலே 'பிக்சட் டெபாசிட்'ல போடுங்க.. நாளைக்கு அவளுக்கு மட்டுமில்லே அவ குழந்தைகளுக்கு கூட இது ஒரு பெரிய பாதுகாப்பு..

-----00-----

புதுசா கல்யாணமானவங்களா.... என் வாழ்த்துக்கள். இத்தனை நாளும், ரெண்டுபேருமே, பெத்தவங்களைச் சார்ந்து வாழ்த்திருப்பீங்க.... பிரச்சனை எது வந்தாலும் அவங்க தலையிலத்தூக்கிப் போட்டுட்டு நிம்மதியா இருந்தீங்க... இனிமே அப்படி பொறுப்பில்லாம நடந்துக்க முடியாது. உங்க காலுல நிற்கப் பழகுங்க. பிரச்னைகளை கூடமான வரைக்கும், நீங்களே சமாளிக்கப்பாருங்க. கோவலனை விடப் பொறுப் பில்லாதவன் கிடையாது. மாதவிகிட்ட எல்லாத்தையும் தாரை வார்த்துட்டு வந்து நின்றான். திரும்ப கண்ணகிகிட்ட வந்தப்ப அவ கால்சிலம்புங்கதான் இருந்ததுன்னு நாம் படிச்சிருக்கோம். இங்கே ஒரு கேள்வி.

-----00-----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "IT OUGHT TO BE BEAUTIFUL, I LIVE HERE"

Those words still ring in my ears, our Principal Mrs. Sarojini Rao used to say that often; "It ought to be beautiful, I live here". She said it at a time when buzzwords such as "Green Peace" and "Environmentally friendly" hadn't entered our vocabulary.

Today, as many of Mrs. Rao's pupils are wives and mothers, we try to bring beauty into our daily lives at home. A beautiful place to live, beautiful clothes for the kids etc. sure, we do our best at home... But outside it? Why can't we make the whole country beautiful, it ought to be, after all we live here.

Looking back it strikes me that wherever the Europeans settled they took great pains to make their surroundings beautiful. Once they were comfortable, they could concentrate better on their work.

I mean just look at what they did in India, Ceylon, Malaya, Africa and Australia. They built parks and gardens, planted avenues of trees. In India, Bangalore, Ooty and Simla are still considered the best towns.

In Colombo, Areas such as Cinnamon Gardens and Galle Face Green were made beautiful by the colonials. They established the Botanical Gardens at Peradeniya. Even in Jaffna the Old Park at Chundikuli area is an oasis of green and shade. The America Mission Schools and other Christian institutions there maintained their grounds and gardens well.

Why can't we in modern day Sri Lanka carry on this tradition? After all, our climate is ideal. And we shouldn't expect the state sector to do all this. It is encouraging to see private sector companies sponsoring establishment and maintenance of gardens in certain roundabouts in Colombo City.

We can do our part by going beyond our front gate and planting shady trees or even crotons out side our



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

walls along the roadside. This is common in the suburbs of Malaysia's Capital Kuala Lampur. In the evenings, as they water their plants/trees, the neighbours get a chance to meet each other and discover the beauty that lies within each human being.

We could take a lesson from the lovely gardens at Nallur Kandaswamy Temple and encourage similar gardens at our favourite temples big or small. On a purely practical note, we need flowers and king coconut and mango leaves for the poojas and festivals.

So instead of saying we could do this or that, we must think, "we should...." and just do it!

So apart from the lessons we learnt from Mrs. Rao in the classroom the most valuable lesson in the legacy she gave us; in the form of our college Motto

***"It ought to be beautiful,***
***I live here".***

**Gnaneswary Gnanasegaram**

## உள்ளத்தின் ஓசைகள்..........

இவங்க இப்படி கையில் காசில்லாம நிக்கறப்ப கோவலனைப் பெத்தவங்களும், கண்ணகியைப் பெத்தவங்களும் 'நம்பர் ஒன் பிஸினஸ் மென்னாக', மல்டி ஸ்டோரீட் பேலஸ்லேதான் வாழ்ந்துட்டிருந்தாங்க. கோவலனோ கண்ணகியோ அங்கே போனாங்களா... போகலையே... பிரச்னை வரச்சே... இதை நினைச்சுக்குங்க ரோஷம் தானா வரும்.

------◇◇◇◇◇◇◇◇◇------

வீட்டுக்கு புதுசா மருமகள் வந்தா, வீடு இந்த அளவுக்கு நிம்மதியா இருக்காது. சுதந்திரம் பறி போயிடுமேன்னு நினைக்கறீங்க நீங்க இதை வாய்விட்டு வெளியே சொல்ல முடியலே... படபடப்பா இருக்கு, அடிக்கடி நெஞ்சை அடைக்கற மாதிரி இருக்கு, ரகசியமாய் போய் கண்ணைத் துடைச்சிட்டு வர்றீங்க. மொத்தத்துல ரத்தக் கொதிப்பு ஏறுது. இப்ப நான் சொல்றதைக் கேளுங்க... வரப் போறவ ஒண்ணும் புலியோ, சிங்கமோ இல்லை. உங்களுக்கு இருக்கற அதே பயம் அவளுக்கும் இருக்கு. அதனால அவளை சிநேக பாவத்தோட வரவேற்கப் பாருங்க. எல்லாம் சரியாகி விடும்.

------◇◇◇◇◇◇◇◇◇------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கலைவாணி

தேடி உனை சரணடைந்தோம் எங்கள்
கலைவாணி
தேசம் எல்லாம் புகழ வேண்டும் எங்கள்
கலைவாணி
நாடி உனை சரணடைந்தோம் எங்கள்
கலைவாணி
நற்பலனை எமக்கருள்வாய் எங்கள்
கலைவாணி
(எங்கள் கலைவாணி)

கற்றவர் நாவினிலே எங்கள் கலைவாணி
கருணையுடன் வீற்றிருப்பாய் எங்கள்
கலைவாணி
வேதத்தின் ஒலியினிலே எங்கள்
கலைவாணி
வேகமாய் வந்திடுவாய் எங்கள் கலைவாணி
(எங்கள் கலைவாணி)

தீபங்கள் ஏற்றுகின்றோம் எங்கள்
கலைவாணி
தீவினை அகற்றிடுவாய் எங்கள்
கலைவாணி
இன்னிசையால் பாடுகின்றோம் எங்கள்
கலைவாணி
இன்பமெல்லாம் தந்திடுவாய் எங்கள்
கலைவாணி
(எங்கள் கலைவாணி)

## சங்க கீதம்

மங்கையர் நாம் ஒன்று கூடி பாடிடுவோம் –
எங்கள்
மங்களத்தாய் இந்து மகளிர் கல்லூரியை
வணங்கிடுவோம்.

நங்கையர் நாம் தேனிசையில் பாடிடுவோம்
– என்றும்
நானிலத்தில் அறிவுடனும் புகழுடனும்
வாழ்ந்திடுவோம்.

ஸ க ம பா; ம ப நீ / ஸ்ா நி த ப ம / பா ; ; / /
ஸ்ா ரி நி ஸ்ா பா நி ம பா / கா ம க ரி நி / ஸா
; ; / /
ஸகா கமா மபா பநீ / நி ஸ் கர் ரி நி / ஸ்ா ; ;
/ /
நிஸ்க்ரிஸ்நி ஸ்ா நி த பா / ஸ் நி த பா ம / கா
ரி ஸ நீ / /

பல்துறையிலும் பண்பாட்டிலும் மகளிர் நாம் –
இன்று
பாரினிலே சிறப்புடனே வாழ்ந்திருக்க
வழிவகுத்தாய்
ஒன்று கூடி உன்பாதம் பணிந்திடுவோம் –
இங்கு
ஓங்கு தமிழில் உன்புகழை பெருமையுடன்
பாடிடுவோம்

ஸ்ஸ் ஸ்ா ; ; க்ரிஸ்நி / ஸ்ஸ் ஸ்ா; / ; ; ; / /
ஸ்ா நிதபம கா ரிஸநீ / ஸஸ ஸா; / ; ; ; / /
ஸகம கமப மபநி பநிஸ் / நி ஸ் கர் ரி நி / ஸ்ா
நி த பா / /
ஸ்நித பாம காரி ஸநீ / ஸஸ ஸா ; / ;;; / /

இயற்றியது
இசை அமைத்தது
செல்வி.அனுராதா அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு – சிறந்த ரொனிக்

சிரிப்பு 'ஹா ஹா ஹா, வாய் விட்டுச் சிரிச்சா நோய் விட்டுப் போகும் என்பார்கள். ஆதாரபூர்வமாக அதற்கு நிரூபணங்களும் உண்டு. ஒரு அமெரிக்க பத்திரிகை ஆசிரியர் நோர்மன் கூலின்ஸ் என்று பெயர். அவருக்கு ஏதோ ஒரு விதமான அழற்சி நோய். டொக்டர்கள் எந்த விதமான வைத்தியமும் அதற்கு இல்லை என்று கைவிட்டு விட்டார்கள். உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா ? ஒரு ஹோட்டலில் அறை எடுத்தார். தினமும் அவருக்குப் பிடித்த தமாஷ் படங்களை டிவியில் போட்டுப் பார்த்தார். ஹாஸ்யக் கதைகள் துணுக்குகள் நிறைந்த புத்தகங்களைப் படித்துப் பார்த்தார். அவருக்கிருந்த நோயின் தாக்கம் வெகுவாகக் குறையத் தொடங்கியது. பழைய டொக்டர்களை சந்தித்து உடலைப் பரிசோதனை செய்யும்படி கேட்டார். அவர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள். நோய் இருந்த இடம் தெரியவில்லை. அவர் உடம்பு குணமாவதற்கு உதவியாக இருந்தது சரிப்புத்தான் என்ற முடிவுக்கு விஞ்ஞானபூர்வமான முடிவுக்கு வந்தார்கள்.

சிரிப்புகள் பலவகை. ஆனந்தச் சிரிப்பு, அட்டஹாசச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, துள்ளல் சிரிப்பு, பல்லவி நிரவல் போன்ற சிரிப்பு, சங்கீதச் சிரிப்பு, வயிறு குலுங்கல் சிரிப்பு, வாய்விட்டுச் சிரிப்பு என்று அது பலரகம்.

சிரிப்பு சுவாசத்தை மேம் படுத்தி இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. உடம்பில் ஹார் மோன்கள் சுரக்க வழி வகுக்கிறது. இப்படி ஆய்வுகள் புலப்படுத்தும் போது, நாம் ஏன் சிரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏன் இதில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் காசா , பணமா?

சிரிக்கும் போது நாலு பேரோடு சேர்ந்து சிரிக்க வேண்டும். அது முக்கியம்-தனியா இருக்கிறபோது சிரிச்சா-அது வேறு அர்த்தத்தைக் கொடுத்துவிடும் ஜாக்கிரதை.

சிரிப்பு என்றதும் ஹா - ஹா என்று தெரு முழுவதும் கேட்கும்படியாக சத்தம் போட்டுச் சிரிக்க வேண்டும் என்றில்லை. லேசான புன்னகை கூட உடம்புக்கு நல்லது. அமைதியைப் புன்னகை ஏற்படுத்துகிறது என்ற உண்மையை ஆதாரபூர்வமாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். புன்னகை மன்னனாகவும், புன்னகை அரசியாகவும் ஒவ்வொருவரும் திகழ்வதற்கு என்ன தடை?

நாம் தமாஷாகச் சிரித்து வாழ வேண்டுமானால், உற்சாகமாக இருக்கிறவர்களுடன் அதிக நேரம் பழக வேண்டும் - சிரியுங்கள். சிரித்துக்கொண்டே இருங்கள். மற்ற வர்களையும் சிரிக்க வையுங்கள். உலகம் ஆனந்தமயமாவதற்கு சிரிப்புத் தான் ஒரேயொரு ஆயுதம்.

***சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஓசைகள்

பிறந்த நாளையும் கல்யாணமான நாளையும் (அதாங்க 'வெட்டிங்டே') கொண்டாடறதுல பெண்களுக்கு அலாதி ஆசைங்க. இதை கணவன்மார் மறந்துடக் கூடாது. அதுவும் எதை மறந்தாலும் 'ஒய்ஃ' போட பிறந்த நாளையும், கல்யாணமான நாளையும் மறக்கவே கூடாது. பெரிசா ஒண்ணும் பரிசளிக்க முடியலைன்னாலும் கொஞ்சம் பூவும், ஸ்வீட்டும், காதலான பார்வையும் போதும். அவங்க ஆயுசு உள்ள வரைக்கும். தன் பிள்ளைங்க, பேரக் குழந்தைங்க கிட்ட கூட சொல்லிட்டே இருப்பாங்க. எங்க பாட்டி தனக்கு கல்யாணமானப் புதுசுல தாத்தா வாங்கிக் கொடுத்த தஞ்சாவூர் கதம்பத்தை பத்தி செத்துப் போறதுக்கு முதல் நாள் வரைக்கும் சொல்லிட்டிருந்தா.

--------00------

சகோதரி இது உங்களுக்கு! அடுத்த வீட்டுக்காரி புருஷனோட – உங்க கணவரை ஒப்பிட்டு வித்தியாசமெல்லாம் கண்டுபிடிக்க முயற்சி பண்ணாதீங்க. 'அவருக்கும் உங்க வயசுதானே உங்கபடிப்புதானே.. அவர் எட்டாயிரம் ரூபா சம்பாதிக்கிறார். நீங்க இரண்டாயிரம் ரூபா சம்பளத்துலேயே நாற்காலி தேய உட்கார்ந்திருங்க..!' – இப்படிப்பட்ட வார்த்தைதான் குடும்பச் சண்டைக்கே ஆரம்பம். அனாவசியமா உங்க வீட்டுக்காரருக்கு காம்ப்ளெக்ஸை உண்டு பண்ணாதீங்க. அவர் உங்களை மட்டும் வெறுக்கமாட்டார். தேவையில் லாமல் பக்கத்து வீட்டுக்காரரையும் சண்டைக்கு இழுக்க கிளம்பிடுவார்.... தேவையா இது?

——00——

தனக்கு வர்ற பெண்டாட்டி ரோஜா மாதிரி இல்லே மீனா மாதிரி இருக்கணும்னொ– இல்லே வர்ற புருஷன்காரன் அர்ஜுன் மாதிரி இல்லே அரவிந்தசாமி மாதிரி இருக்கணும்னோ கனவு கண்டுகிட்டே காலத்தைக் கழிக்கிறது அசட்டுத்தனம்ங்க. பெண்டாட்டிகிட்ட இருக்கிற ஒண்ணுரெண்டுபிளஸ் பாயிண்ட்டை (என்னது எதுவுமே இல்லையா.... இருக்கும். நல்லா தேடிப்பாருங்க) முன் நெற்றி அழகு, பல்வரிசை இல்லே பலர்க்கிட்டயும் சிரிச்சு பேசறபாங்கு, இப்படி எதையாவது கண்டுபிடிச்சு– அதுக்காக அவளை லவ்பண்ணுங்க சார். மேடம்... உங்களையும்தான் சொல்றேன். சினிமா ஹீரோவைப் பார்த்த கண்ணோட. ஹஸ்பெண்டைப் பார்க்காதீங்க அவரோட சாமர்த்தயமானப் பேச்சை, சிரிப்பை. நடையை – இப்படி எதையாவது ரசிக்க கத்துக்குங்க. அப்பதான் வாழ்க்கையை அனுபவிக்க முடியும்.

--------00------

பொண்ணுங்க அப்படியொன்றும் புரியாத புதிரில்லீங்க! டெக்னிக் தெரிஞ்ச எந்த புருஷனும், பொண்டாட்டிய தனக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த மாதிரி ஆடவைக்கமுடியும். எப்படியின்னுகேட்கறீங்களா? குடும்ப வரவு செலவை என் ஒய்ஃப் மாதிரி யாராலேயும் மானேஜ் பண்ண முடியாதுன்னு சொல்லப்பாருங்க. அப்புறம் அவ பத்து பைசாக்கூட ரகசியமா அஞ்சரைப் பெட்டியிலேயோ பெருங்காய டப்பாவிலேயோ ஒளிச்சு வைக்கமாட்டா. அதேபோல, 'போன வருஷம் தீபாவளிக்கு எடுத்த க்ரீம் கலர் புடவை உனக்கு எத்தனை அழகாகப் பொருந்தறது தெரியுமா'ன்னு சொல்லி வையுங்க ( இது மாதிரி பொய் எல்லாம் அப்பப்ப சொல்லலாம் தப்பில்லே) இந்த வருஷம் அநாவசியமா உங்க ஒய்ஃப் புதுப்புடவைகளை வாங்க மாட்டா.

--------00------

அடுத்தவன் பொண்டாட்டிய பத்தி உங்க வீட்டுக்காரிகிட்ட 'ஓகோ'ன்னு புகழாதீங்க.. 'என் சினேகிதன் கொடுத்து வச்சவன்' இப்படி நீங்க சொல்ற அதே நேரத்துல - உங்க ஃபிரண்டும் தன் பெண்டாட்டிகிட்ட இதையே சொல்லிட்டிருப்பான். உங்க சம்சாரமே பொறுமை இழந்து 'என் சினேகிதியும் தான் கொடுத்து வச்சவ அவ புருஷன் மாதிரி வருமா'ன்னு சொல்லிட்டா- நீங்க அப்புறம் உங்க மூஞ்சிய எங்கே கொண்டு வச்சுப்பீங்க? பிறன் மனை நோக்காமைக்கு இப்படியும் அர்த்தம் பண்ணிக்கலாம்!

--------00------

என்னம்மா குழந்தை... உன் வீட்டுல உன் கல்யாணத்துக்காக, அம்மா அப்பா தன் சக்திக்கு மீறி வரதட்சணை, சீர் செய்யப் போறாங்களா? 'மாப்பிள்ளை வீட்டுல கேட்கறாங்க... என்ன செய்யறது'ன்னு கையாலாகாத்தனமா முனகாதே. இந்த இடத்துல நீயும் குற்றவாளிதான்... பெத்தவங்களை பெரிய கடனாளி ஆக்கறதுனாலே தகுதிக்கு மேலே நகையோ, தொகையோ கேட்டா, இந்தக் கல்யாணத்துக்கு நீ சம்மதிக்காதே. உன்னை நீயே காப்பாத்திக்கற தகுதி இருந்தாத்தான் - இந்தக் கொடுமையை எதிர்க்க முடியும்.

--------00------

அந்தத் தகுதிய அடையற துக்காக நீ இன்னும் சொஞ்சம் காலம் கன்னியா இருக்க வேண்டி வந்தாலும் காத்திரு பெத்தவங்களைக் கடனாளி யாக்கிட்டு, நீ மட்டும் கழுத்து நிறைய சங்கிலிங்களைப்போட்டுட்டுப் புருஷன் வீட்டுக்கப் போறதை விட மகா பாவம் வேற இல்லே.

--------00------

உங்க பிள்ளை எந்தப் பெண்ணையாவது லவ் பண்ணறதா வந்து சொன்னா 'தாட் பூட்'ன்னு குதிக்காதீங்க 'சரி... பையன் வளர்ந்துட்டான். அவன் இஷ்டப்படியே செஞ்சு வைப்போமே' யின்னு பெருந்தன்மையா நடந்துக்குங்க. அவனிஷ்டத்தை எதிர்த்தா, அவன் தான் விரும்பற பொண்ணை கட்டிட்டு, உங்களைப் பகைச்சிட்டுப் போவான்.. தேவையா உங்களுக்கு ?

--------00------

இதுவே அவங்க விருப்பத்துக்கு மதிப்பு கொடுத்தா- வர்ற மருமக, மனசுக்குள்ளே உங்களுக்கு கோவிலே கட்டிடுவா... எதைச் செய்யறதா இருந்தாலும் அப்புறம் - உங்க வார்த்தைய மதிச்சு செயல்படுவா.. எது ஒசத்தி? யோசிச்சு எதையும் முடிவெடுங்க.

--------00------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணச் சந்தையிலே நிக்கற மாப்பிள்ளைகளுக்கும் ஒரு வார்த்தை.. கொஞ்சம் அப்படியே ரிவர்ஸ்லே போங்க... கி.பி. கி.மு. காலத்துக்கும் முன்னாலே... போயிட்டிங்களா? ஓ.கே. அந்தக் காலத்துல எந்த ஆம்பிள்ளையும் சீரோ, வரதட்சணையோ வாங்கின தில்லே... கவனிச்சீங்களா?

--------00------

ஆசைப்பட்டவன்– காடு, மலை, கடல் இப்படி எல்லாத்தையும் கடந்து போய் பொருள் தேடிட்டு வருவான். தான் விரும்புகிற பொண்ணோட அப்பா அம்மாகிட்ட கொடுப்பான். அந்தப் பணத்திலேயோ, பொருளிலேயோதான் கல்யாணப் பெண்ணுக்கு ஆடை, அலங்காரமே நடக்கும். அந்த வீர வாலிபர்கள் வாழ்ந்த நாட்டுலதான் 'எதிர்ஜாமீன்' கற வார்த்தையைப் போட்டு, உங்களைப் பெத்தவங்களும் பெண்ணைப் பெத்தவங்களும்– உங்களையே காலி டப்பா வாக்கறாங்க. திருவோடா மாத்தறாங்க. கொஞ்சம்... ஏன்... நிறையவே தலைகுனிவா இருக்கு.... இல்லே?

--------00------

புத்திமதி எல்லாத்தையும் என் சம்சாரத்துக்குச் சொல்லுங்க... நான் எல்லாரோடயும் அட்ஜஸ்ட் பண்ணிக்கு வேன்னு தலைய நிமிர்த்திட்டுப் போறீங்களே... உங்களைத்தான்... மருமக வந்தாச்சுன்னா, அவகிட்டவும், பிள்ளை கிட்டயும். நல்ல பேரு வாங்கிக்கணும்கற வேகத்துல பெண்டாட்டிய 'அம்போ'ன்னு விட்டுடுவீங்களே... 'இந்தா... இங்கே பாரு இத்தனை வருஷமா நீயும் சமைச்சிருக்கியே... உன் மருமக சமைப்பிருக்கா பாரு... அடடா வாசனையே அள்ளிட்டுப் போகுது' – இப்படிச் சொல்றதுனால மருமகளோடப் பிரியத்தைச் சம்பாதிக்கலாம். ஆனா– மனைவிக்கு நம்பிக்கை துரோகம் செஞ்சிடாதீங்க, மகனுக்குக் கல்யாணமானாலும் வீட்டுல இருக்கறவங்க எல்லோரும் புதுசா வந்தவ பக்கம் சேர்ந்துட்டு தன்னை ஓரம் கட்டறதா உங்க மனைவி நினைக்க ஆரம்பிச்சிட்டா வேற வினையே வேண்டாம் குடும்ப கலகத்துக்கு நீங்களே வித்திட்டதா ஆயிடும்!

--------00------

புது மாப்பிள்ளை சார்... உங்க பொறுப்புதான் நிறைய... பெண்டாட்டி நிக்கற பக்கமே மனசு அலையும், அம்மா தப்பா நினைச்சிடப்போறாங்களேயின்னு இன்னொரு மனசு அடிச்சிக்கும். புது மனைவிகிட்ட தனியாப் பேசற சந்தர்ப்பம் கிடைக்கறப்ப– எங்க அம்மா தெய்வம் மாதிரி –அவளை எதிர்த்திட்டு புதுக் குடித்தனம் போகணும்னு எல்லாம் நீ நினைக்கக் கூடாது– இப்படியெல்லாம் சமர்த்தாப் பேசற மாதிரி நினைச்சிட்டு அவளை கதிகலங்க அடிக்காதீங்க.

--------00-------

ரெண்டுபேரும் மனுஷிங்கதான் பாசத்துக்குக் கட்டுப்பட்டவங்கதான். ஒருத்தி வயசாகி, தள்ளாமையோட... வர்றவ என்ன சொல்லப்போறாளோங்கற பயத்துலநிக்கறா. இன்னொருத்தி பூ ஏகப்பட்ட கற்பனை.. புதுசாப்போற வீட்டு சமையலறைப் பத்தி தெரிஞ்சுக்கறதை விடவும் படுக்கையறைப் பத்தி தெரிஞ்சுக்கறதுலதான் அக்கறையா இருக்கா.... ரெண்டு பக்கமும் ஒரு சுமுகமான உறவை நீங்கதான் ஏற்படுத்தித் தரணும்.

எழுதியவர்- அனுராதா ரமணன்

நன்றி – 'மங்கை...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# TOY WORLD

*(Hart Organisation Pvt)*

56/1 Front Street
Colombo -11
Tel: 07868595

*With Best Compliments*

# MONTRECAN SERVICES

64, Keyzer Street
Colombo- 11
Tel : 348148/9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

' யாழ் நாதம் ' நாள் ஒரு மேனியும் பொழுதொரு
வண்ணமும் வளர்ந்து வர வாழ்த்துகிறோம்

# SRI MAITHILY JEWELLERS

**153 A Sea Street,**
**Colombo -11**

அரசாங்க மாணிக்ககல் கூட்டுஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கையான `SMJ 22' உத்தரவாத முத்திரையிடப்பட்ட நகைகளை வாங்குவதற்கு சிறந்த இடம் : (குழு குழு காட்சி அறை உள்ளது)

## ஸ்ரீ மைதிலி ஜுவெலர்ஸ்

153 A. செட்டியார் தெரு, கொழும்பு –11
போன் : 434490, 449400 Fax: 434488

*With Best Compliments*

# *Well Wisher*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# Colombo Diagnostics (Pvt) Ltd

Facilities Offered:

* Automated laboratory with computerised reports
* Channelled consultations
* ECG, X ray
* Medical Profiles, hormone profiles
* Viral studies

**For your convenience we provide you with**

Ample parking space
Uninterrupted power supply
Personalised attention

## PS. WE ARE NOW IN BORELLA

**100 yards away from the Borella Junction**

62, Cotta Road, Colombo, 8

Tel: 694102, Fax: 575472, Email: andy@sri.lanka. net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு ஆண்டு நிர்வாகிகள் 1996

தலைவி

செல்வி சற்சொரூபவதி நாதன்

உபதலைவிகள்

திருமதி. இந்திராணி சோமசுந்தரம்

திருமதி. இராஜகுமாரி கதிர்காமநாதன்

திருமதி. பொன்மலர் கந்தசாமி

செயலாளர்

திருமதி. சிவகாமி அம்பலவாணர்

உதவிச் செயலாளர்கள்

திருமதி. தயாநிதி செல்வநாயகம்

திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்

பொருளாளர்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

உதவிப் பொருளாளர்

திருமதி. கௌரி தேவசேனாதிபதி

நிர்வாகக் குழுவினர்

திருமதி. நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டர்
செல்வி. அனுராதா அம்பலவாணர்
திருமதி. மனோன்மணி அருணாசலம்
செல்வி. ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
செல்வி. சீதா செல்லையா
திருமதி. மகேஸ்வரி கணேசமூர்த்தி
திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி. நாகேஸ்வரி கனகசபை
திருமதி. விமலா மணிவாசகன்
திருமதி. நந்தினி மோகன்
திருமதி. தங்கராணி நவானந்தராஜா
திருமதி. யோகேஸ்வரி பரமேஸ்வரன்
திருமதி. சீதா பொன்னுத்துரை
திருமதி. லீலாவதி இரத்தினசிங்கம்
திருமதி. மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி. புவனேஸ்வரி சத்தியநாதன்
திருமதி. கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி. சத்தியலஷ்மி சிவலிங்கம்
திருமதி. பத்மா சோமகாந்தன்
திருமதி. நாகபூஷணி சுப்பிரமணியம்
செல்வி. சிவமலர் சுப்பிரமணியம்
செல்வி. சாந்தாவதி தர்மலிங்கம்
திருமதி. தற்பராதேவி தில்லைநாதன்
திருமதி. திலகா விஜயரத்தினம்
திருமதி. புவனேஸ்வரி யோகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"It ought to be beautiful, I live here"*

## யாழ் / இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
## கொழும்புக் கிளை

## J/HINDU LADIES' COLLEGE - O.G.A.
## COLOMBO BRANCH

### அங்கத்துவ மனுப்பத்திரம்

### Application for Membership

முழுப்பெயர்:
Full Name:........................................................................................................

விலாசம்:
Address:..........................................................................................................

தொலைபேசி எண்:
Phone No:........................................................................................................
(If any)

| | | |
|---|---|---|
| சந்தாப்பணம் | 1. சாதாரண அங்கத்துவம், ஒரு வருடம்<br>Annual Subscription | Rs. 100.00 |
| Subscription | 2. சீவிய அங்கத்துவம்,<br>Life Membership | Rs. 1,000.00 |

அறிமுகப்படுத்துபவர்:
Intruduced by: ........................................................................................

சந்தாப்பணம் ரூபா........................................................ இத்துடன் அனுப்புகின்றேன்.

.......................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்
Signature of applicant

திகதி:
Date:............................................................

Please send this form with the subscription to:

J/ Hindu Ladies' College, - O.G.A. - Colombo Branch
C/o Miss. S. Nathan, 112 3/1, Galle Road, Colombo 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*


# HOTEL SEIVAMS (PVT) LTD

**55, Sivananda Road**
**Kotahena**

**Branch- 391/6, Galle Rd**
**Wellawatte**
**Colombo-6**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*



Vasantha Jewellery (Pvt) Ltd

Manufacturers and Exporters of Genuine Gold Jewellery Authorized Money Changers

**T'phone :** 342266
430624
**Fax:** 449319

**11/20,** Gold Plaza
Sea Street
Colombo -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org